பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | மாசி 27 | திங்கட்கிழமை 11.03.2019 | கதிர் 127

## இனி இது ரகசியம் அல்ல!

நேற்று இப்பத்தியில் கோடி காட்டியபடி ரெலோவின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் வலு 'சூடாக' நடந்து முடிந்திருக்கின்றது.

ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு மேலும் பக்கம் 02 >>>



மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சில சாதகமான விடயங்கள்

உள்ளே பக். 03



வடகொரிய நாட்டின் நாடாளுமன்ற தேர்தல் ஒரேயொரு வேட்பாளரே போட்டி


உள்ளே பக். 08



இந்திய அணியை கதிகலங்க வைத்தது எப்படி?

உள்ளே பக். 08

# ஜெனீவாவில் இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது!



## ஐந்து கட்சிகள் கூட்டாகத் தீர்மானம் கூட்டமைப்புக்கு எதிரான நிலைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 11

ஐ.நாவில் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கக்கூடாது என்ற கோரிக்கை உட்பட மூன்று கோரிக்கைகளை உள்ளடக்கி ஜெனீவாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்புவதற்கு 5 தமிழ்க் கட்சிகள் கூட்டாக இணக்கம் கண்டுள்ளன. பக்கம் 11 >>>




கொழும்பு, மார்ச் 11

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன இணைந்து அமைக்கவுள்ள கூட்டணி தொடர்பான தீர்க்கமான கலந்துரையாடல் எதிர்வரும் வியாழனன்று எதிர்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது புதிய கூட்டணியின் தலைவர், பக்கம் 11 >>>

## பட்ஜெட்டை எம்முடன் சேர்ந்து கூட்டமைப்பு எதிர்க்கவேண்டும்

### யாழ்ப்பாணத்தில் வைத்து ஜே.வி.பி. கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,மார்ச் 11

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு மற்றும் வரவு - செலவுத் திட்டம் ஆகியவற்றை எம்முடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்க்கவேண்டும் என ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க நேற்று பக்கம் 11 >>>

## போர்க்குற்ற விவகாரம் தொடர்பில் என்னுடன் எவருமே பேசமுடியாது!

### ஐ.நா. தீர்மானத்தை மூடிவைக்கவும் என்கிறார் மைத்திரி



கொழும்பு, மார்ச் 11

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இனிமேல் எந்தத் தீர்மானமும் இலங்கை மீது நிறைவேற்றப்பட்டாலும் அதனை ஏற்க நான் பக்கம் 11 >>>

## போர்க்குற்ற விசாரணையில் தமிழ்க் கூட்டமைப்பு உறுதி

### கூறுகிறார் யோகேஸ்வரன் எம்.பி.

மட்டக்களப்பு, மார்ச் 11

இறுதிப்போரில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் விசாரணை செய்யப்படவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாகவிருக்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட் பக்கம் 11 >>>

## சப்ரகமுவவிலிருந்து விரைவில் யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர்!

### வடக்கு ஆளுநர் நடவடிக்கையாம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

சப்ரகமுவ மாகாணத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குழாய் மூலம் குடிதண்ணீரைக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். பக்கம் 11 >>>

## பொதுவேட்பாளர் இல்லாது தேர்தலில் வெல்ல முடியாது

### தயாசிறி சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 11

பொதுவேட்பாளர் இன்றி ஜனாதிபதித் தேர்தலில் ஹவெற்றி பெற முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி பக்கம் 11 >>>

## புதிய கூட்டமைப்பின் ஊடாக நல்லிணக்கம் ஏற்படுத்தப்படும்

### பிரதமர் ரணில் அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 11

ஐக்கிய தேசியக் கட்சி வேறு கட்சிகளுடன் இணைந்து அமைக்கவுள்ள புதிய கூட்டமைப்பின் ஊடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்லிணக்கம் என் பக்கம் 11 >>>

## சவேந்திர சில்வாவுக்கு எதிரான விசாரணைக்கு ராணுவம் மறுப்பு!

கொழும்பு, மார்ச் 11

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக உள்ளக விசாரணைகளை பக்கம் 11 >>>

## மன்னார் மனிதப் புதைகுழி எச்சங்கள் அரை நூற்றாண்டுக்கு உட்பட்டவையே!

### தடயவியல் பேராசிரியர் கருத்து

மன்னார், மார்ச் 11

மன்னார் மனித புதைகுழி அரை நூற்றாண்டுக்கு உட்பட்டதே என்று தடவியல் நிபுணர் பேராசிரியர் செல்வ சுரேஷ் தெரிவித்துள்ளார்.

மன்னார் மனிதப் புதைகுழி பக்கம் 11 >>>

## மாகாண முன்னாள் உறுப்பினர் பயணித்த கார் மீது தாக்குதல்!

மட்டக்களப்பு, மார்ச் 11

கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் பயணித்த கார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாய்ந்தமருதுப் பிரதேசத்தில் அல் ஹிலால் பக்கம் 11 >>>

## சூட்டுக் காயத்துடன் படைச் சிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம், மார்ச் 11

கட்டுத்துவக்கில் சிக்கிக் காயமடைந்த இராணுவச் சிப்பாய் ஒருவர், யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு சேர்க்கப்பட்டுள்ளார். பக்கம் 11 >>>

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

# வடக்கு-கிழக்கு மக்களின் ஆதரவுடன் ஜனாதிபதித் தேர்தலில் வெல்வோம்

## பஸில் ராஜபக்ஷ அறிவிப்பு



மஹிந்த ராஜபக்ஷவால் முன் மொழியப்படும் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் டிசம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டும். அந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் களமிறங்கும் வேட்பாளர் டிசம்பர் 9 ஆம் திகதியாகும்வரை இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்பார்.

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற விடயத்தில் எம்மிடையே (கூட்டு எதிரணிக்குள்) கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக சிலர் குறிப்பிடுகின்றனர். அவ்வாறு எந்த முரண்பாடும் இல்லை. மஹிந்த ராஜபக்ஷவால் முன்மொழியப்படும் வேட்பாளருக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பலப்படுத்தப்படும். வடக்கு, கிழக்கு மக்களையும் இணைத்துக் கொண்டு - அவர்களின் அமோக ஆதரவுடன் தேர்தலை சந்திப்போம் - என்றார். (ஐ)

# மத்திய வங்கி ஊழலை நிறுத்தியது இந்த அரசே

## அஜித் மான்னப்பெரும பெருமிதம்

மத்திய வங்கியில் இடம்பெற்று வந்த மோசடியை நிறுத்தியது இந்த அரசாங்கமேஎன இராஜாங்க அமைச்சர் அஜித் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத்திட்ட இரண்டாம் கட்ட விவாதத்தில் இணைந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த அரசில் மத்திய வங்கியில் ஊழல்மோசடி இடம்பெற்று வந்துள்ளது என்பதை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு முதல் இந்த மோசடி இடம்பெற்று வந்துள்ளதை குறித்த அறிக்கைகள் கூறுகின்றன. எனினும் கண்டு பிடிக்க முடியாதவாறே அந்த மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த ஊழல்வாதிகள் விசாரணை நடத்த முடியாதவாறு சட்டத்திலுள்ள ஓட்டைகளில்நுழைந்து மறைந்து விடுகின்றனர்.

இதனால் அவர்களுக்கு தண்டனைகளைப் பெற்றுக் கொடுப்பதில் பலமுட்டுக்கட்டைகள் காணப்படுகின்றன. இந்நிலையில் 2016 ஆம் ஆண்டிற்குப் பின்னர் எந்த விதமோசடியும் இடம்பெறவில்லை - என்றார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கால அவகாசம் கொடுக்கக்கூடாது என்ற வாசகம் அடங்கிய கடிதம் ஒன்றை அளிப்பதா, அதில், ரெலோ கையெழுத்திடுவதா என்பது பற்றிய சர்ச்சை பெரும் இழுபறியாகத் தொடர்ந்தது.

இறுதியில் அத்தகைய கடிதம் ஒன்றில் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியின் ஒப்பத்தை பெறுவதில் வெற்றிகொண்டது கட்சியின் செயலாளர் நாயகம் ஸ்ரீகாந்தா - தவிசாளர் சிவாஜிலிங்கம் இணை.

'அந்தக் கடித வாசகத்தில் இலங்கைக்குக் கால நீடிப்பு வழங்கக்கூடாது என்ற வாசகம் இருக்கத் தேவையில்லை என்ற முடிவே கூட்டத்தில் எட்டப்பட்டதாக ரெலோ அரசியல் குழுவின் ஒன்பது பேரில் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், செல்வம் அடைக்கலநாதன் எம்.பியிடம் ஒப்பம் வேண்டிய கடிதத்தில் அந்த வாசகம் இருந்தது.

இந்தக் கடிதத்தில் நேற்று முன்தினமே தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியின் ஒப்பம் பெறப்பட்டுவிட்டது.

நேற்றிரவு வடக்கு முன்னாள் முதல்வரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் ஒப்பமிட்டனர். புளொட் தலைவர் சித்தார்த்தன் இன்று ஒப்பமிடுவார் எனக் கூறப்பட்டது.

ஆக, ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக இப்போதுவரவிருக்கும் 40/01 பிரேரணை இலங்கை மீதானஎல்வித்தேசக்கண்காணிப்பை நீடிக்கும் விடயம் என்று குறிப்பிட்டு அதை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை கூட்டமைப்பின் தலைமை, குறிப்பாக சம்பந்தன் - சுமந்திரன் இணை எடுத்துப் பகிரங்கப்படுத்த -

அதற்கு நேர்மாறான, அத்தகைய தீர்மானம் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கும் ஒரு முடிவு என்று அதை அர்த்தப்படுத்தி, அப்படிச் செய்யக்கூடாது என்ற ஒரு நிலைப்பாட்ட முடிவுக்கு ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் மக்கள் கூட்டணி, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஐந்து பிரதான கட்சிகளை ஒன்றிணைக்கும் தமது அரசியல் தந்திரோபாயத் திட்டத்தில் ரெலோவின் ஸ்ரீகாந்தா - சிவாஜிலிங்கம் இணை நேற்றிரவு வரை கணிசமான அளவு முன்னேறி வெற்றி கண்டிருக்கின்றது.

அவர்கள் இந்த ஐந்து கட்சிகளை ஒன்றிணைத்துக் காய் நகர்த்தும் தந்திரோபாயத்தில் மேலதிகமாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் இணைத்துக் கொள்ளுவார்களானால், அது தற்போதைய கூட்டமைப்புத் தலைமைக்கு - சம்பந்தன், சுமந்திரன் இணைக்கு - 'சபாஷ் நல்ல போட்டி' என்று கூறலாம்.

ஆனாலும் இந்த அரசியல் காய்நகர்த்தல் தந்திரோபாயம் எல்லாம் 'பாம்பும் ஏணியும்' விளையாட்டுப் போன்றதுதான்.

நேற்றிரவு வரை ஸ்ரீகாந்தா - சிவாஜி அணிக்கு ஏணியில் ஏறும் வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. திடீரெனத் தனது முடிவில் செல்வம் குத்துக்கரணம் அடிப்பாராயின் அது பாம்பின் வாயில் சிக்கியமை போன்று அரசியல் இறங்குமுகமாகிவிடும்.

நேற்றைய ரெலோவின் அரசியல் செயற்குழுக் கூட்டத்தில், பிரதான பேசுபொருளாக இருந்தது 'காலைக்கதிர்'தான்.

அதன் விமர்சனங்கள், குறிப்புகள், எதிர்வினைகள், தெறிப்புகள், ஒரு தரப்புக்குப் பிடிக்கவில்லைப் போலும். 'காலைக்கதிர்' ஆசிரியர் 'டபிள் ஏஜெண்ட்', அரசியலில் பதவி ஏதும் கிடைக்காமையால் விரக்தியில் தங்களைத் தாக்கி மோசமாக விமர்சித்து எழுதுகின்றார் என்றெல்லாம்கூட அங்கு பொறிபறந்ததாகக் கேள்வி.

'காலைக்கதிர்' நாளிதழின் செய்திகள், விமர்சனங்கள் சம்பந்தமாக பாதிப்புற்ற தரப்புகள் இருக்குமானால் அவை தமது தரப்பு நியாயங்களை மூடிய அறைக்குள் குசுகுசுக்கத் தேவையில்லை. தேவையற்ற மேடைகளில் விமர்சனத்துக்குச் செல்ல வேண்டியதுமில்லை. 'காலைக்கதிர்' நாளிதழையே தாங்கள் தளமாகப் பயன்படுத்தலாம். அதற்கான சுதந்திரமும் உரிமையும் அவற்றுக்கு உள்ளன. 'காலைக்கதிர்' பற்றிய விமர்சனங்களையும் தங்கள் பக்க நியாயங்களையும் 'காலைக்கதிர்' ஊடாக மக்களின் முன் அவர்கள் வைக்கலாம். அதற்கான சந்தர்ப்பத்தை எந்த மட்டுப்படுத்தல்களோ அல்லது கட்டுப்படுத்தல்களோ இன்றி 'காலைகதிர்' வழங்கும் என உறுதி கூறுகிறோம்.

அடுத்து ஒரு விடயம் -

நமது தமிழ் மக்களுக்கும், நமது அரசியல் தலைவர்களுக்கும் இடையில் செய்தி காவும் ஊடகவியலாளர் என்ற முறையில் - இந்த இரு தரப்புகளுக்கும் இடையில் முகவராகச் செயற்படுகின்றவர் என்ற காரணத்தால் - காலைக்கதிரின் ஆசிரியர் ரெலோ பிரமுகர் கூறியபடி ஒரு 'டபிள் ஏஜெண்ட'தான்!

இவ்வளவு போராட்டங்கள், தியாகங்கள், பேரழிவுகளுக்கும் பின்னரும் நமது தமிழ்த் தலைமைகளினால் நமது மக்களின் அபிலாஷைகளில் கிஞ்சித்தைக் கூட எட்டமுடியவில்லை என்ற விரக்தி 'காலைக்கதிர்' ஆசிரியருக்கும் ஆழமாக உண்டு. அந்த வகையில் ரெலோப் பிரமுகர் கூறியபடி அவரும் விரக்தியில் தான் எழுதுகின்றார் என்பதும் கூட மறக்கற்பாலதன்றுதான்!

- மின்னல்-

# கடற்படையின் பஸ் மோதி பெண் காயம்!

[illegible]

# ஐ.நா. பிரதிநிதியாக சேனுக செனவிரட்ன?

கொழும்பு, மார்ச் 11

ஐ.நாவின் நியூயோர்க் தலைமையகத்துக்கான இலங்கை வதிவிட பிரதிநிதியாக சேனுக செனவிரட்னவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சை மேற்கோள்காட்டி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய ஒன்பது நாடுகளுக்கான தூதுவர்களின் பெயர்களும் நாடாளுமன்ற உயர் பதவி குழுவுக்கு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

இதற்கமைய, நாகன்டல - நெதர்லாந்து, குணசேகர - இந்தோனேசியா, ஜெயசூரிய - தாய்லாந்து, சேரம் - பஹ்ரெய்ன், எஸ்.கே.குணசேகர - பிலிப்பைன்ஸ், அமீர்ராஜ்வாட் - ஓமான், ஜெயசிங்க - ஐக்கிய அரபு இராச்சியம், வில்பத்த - இஸ்ரேல் ஆகியோரின் பெயர் விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விரைவில் இதற்கான அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு அனுமதி கிடைத்தவுடன் அவர்கள் தங்களது கடமைகளை பொறுப்பேற்பார்கள் எனக் கூறப்பட்டது. (ஐ)

# எரிபொருள் விலை மீண்டும் உயர்கிறது

கொழும்பு, மார்ச் 11

எரிபொருள் விலைச் சூத்திரத்திற்கு அமைய இன்று முதல் புதிய விலைப்பட்டியல் அறிவிக்கப்படவுள்ளது.

அதன்படி இன்று முதல் எரிபொருளின் விலை மீண்டும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது

சர்வதேச சந்தையில் எரிபொருளுக்கு காணப்படும் விலையுடன் ஒப்பிட்டு அமுல்படுத்தப்படும் எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அமைய இந்த மாற்றம் இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் தற்போது உலக சந்தையில் எரிபொருள் விலைகள் அதிகரித்து வருகின்ற நிலையிலேயே மீண்டும் அதிகரிக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மாதம் விலை சூத்திரத்தின் அடிப்படையில் ஒக்டேன் 92 ரக பெற்றோல் 6 ரூபாயினாலும் ஒக்டேய்ன் 95 ரக பெற்றோல் 5 ரூபாயினாலும் ஒட்டோ டீசல் 4 ரூபாயினாலும் சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 8 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியா விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சை பயனின்றிச் சாவு

வவுனியா, மார்ச் 11

வவுனியாவில் கடந்த மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த வவுனியாவைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

வவுனியா கண்டி வீதியில், பொலிஸ் அத்தியட்சகர் காரியாலத்துக்கு அருகாமையில் இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளும் முச்சக்கரவண்டியும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக கூறப்படுகின்றது. (ஐ)

# வெள்ளிக்கிழமைகளிலேயே அதிகளவான விபத்துக்கள்

கொழும்பு, மார்ச் 11

நாடளாவிய ரீதியில் வெள்ளிக்கிழமைகளிலேயே அதிகளவான விபத்துக்கள் இடம்பெறுவதாக பொலிஸ்தலைமையகம் அறிவித்துள்ளது.

பொலிஸ் தலையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், பொதுவாக நாட்டில் இடம்பெறும் வீதி விபத்துக்களானது அதிகமாக வெளளிக்கிழமை கிழமைகளிலேயே இடம்பெறுகின்றது.

இந்த விபத்துக்கள் வெள்ளிக்கிழமைகளில் மாலை 4 மணித்தொடக்கம் 8 மணி வரையான நேரத்திற்குள் இடம்பெறுகின்றன.

கடந்தாண்டு இடம்பெற்ற 35,000 விபத்துக்களை மையகமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, 20 தொடக்கம் 40 வயதுக்கு இடைப்பட்ட சாரதிகளே இந்த விபத்துக்கு காரணமாக இருந்துள்ளனர்-என்றார். (ஐ)

# ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சில சாதகமான விடயங்கள்

## மக்கள் போராட்டங்களால்தான் இவை சாதகமாகின என்கிறார் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன்

கிளிநொச்சி, மார்ச் 11

மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தினை நிறைவேற்றாமல் பல்வேறு ஏமாற்று வழிமுறைகளை இலங்கை அரசு கையாண்டு ஏமாற்றிவந்த நிலையில் அவற்றுக்கு எதிராகத் தொடர்ச்சியாக உண்மை நிலைமைகளை எடுத்துக்கூறி மக்களாகிய நீங்கள் நேர்கொண்ட போராட்டங்களும் அரசியல் செயற்பாடுகளுமே ஐநாமனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சில சாதகமான விடயங்கள் உள்ளடக்கப்படுவதற்கு காரணமாக அமைந்திருக்கின்றன.

இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் பங்கேற்று உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

தமிழ் மக்கள் கூட்டணி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் திறக்கப்படும் முதலாவது மக்கள் தொடர்புப் பணிமனை இதுவாகும். இந்த நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெறுவதில் முக்கியத்துவம் இருக்கின்றது. தமிழ் மக்களின் போராட்ட காலங்களில் கிளிநொச்சி மாவட்டம் பல வகிபாகங்களை வகித்திருக்கின்றது.

போர்க் காலங்களில் இலட்சக்கணக்கான எமது மக்கள் குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்தபோது கிளிநொச்சியில் தான் அடைக்கலம் புகுந்தார்கள். கிளிநொச்சி மாவட்டத்தின் தன்னிறை பொருளாதார வளங்களே இந்த மக்களுக்கான உணவு, உறையுள் என்பவற்றை வழங்கி அவர்களைப் பாதுகாத்தது. அடைக்கலம் புகுந்த மக்களை அரவணைத்து வேண்டிய உதவிகள் அனைத்தையும் வழங்கி கிளிநொச்சி மாவட்ட மக்கள் தமது சகோதரத்துவத்தை காண்பித்திருந்தார்கள்.

அதேபோல கிளிநொச்சி மாவட்ட மக்கள் எமது உரிமைகளுக்கான போராட்டத்தில் பல்வேறு வகைகளிலும் மகத்தான பங்களிப்பை இதுவரை வழங்கி வந்துள்ளார்கள். பலதியாகங்களை செய்திருக்கின்றார்கள். அரசியல் ரீதியான பங்குபற்றலும் விழிப்புணர்வும் உங்களிடம் அதிகம் என்று கூறினால் மிகையாகாது. இந்த வகையில் கிளிநொச்சியில் எமது முதலாவது பணிமனையைத் திறந்து வைப்பது சாலப் பொருத்தமானது.

எமது உரிமைகளை மீட்டெடுப்பதற்காகப் பலதசாப்தங்களாக நாம் போராடி வருகின்றோம். சொல்லொண்ணாத் துன்பங்களையும் துயரங்களையும் தாங்கி மாபெரும் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டு தொடர்ச்சியாக இன நீதி மறுக்கப்பட்டு சொந்த மண்ணிலேயே அடிமைகளாக வாழ்ந்து வருகின்ற துயர் நிலையைக் கொண்டவர்களாக நாம் வாழ்ந்து வருகின்றோம்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலான தமிழர்களின் ஆயுதம் தழுவிய உரிமைமீட்புப்போராட்டம் 2009 மே மாதத்தோடு மௌனிக்கப்பட்டு இவ்வாண்டோடு பத்தாண்டுகள் நிறைவுபெறுகின்றன. இந்நிலையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்படாமலும் இனப்படுகொலைக்கான நீதி, போர்க்குற்ற விசாரணை, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, இராணுவத்தின் பிடியில் உள்ள காணிகள் விடுவிப்பு, போர் முடிந்து இராணுவத்தினர் வெளியேறுதல் போன்ற பல விடயங்களில் ஆட்சி அதிகாரத்துக்கு வருகின்ற அரசுகளின் தொடர்ச்சியான ஏமாற்றுநாடகமும் அரச எதிர்ப்பில்லாத தமிழ் அரசியல்தலைவர்களின் நிலைப்பாடும் தமிழ் மக்களாகிய எமது மனதில் ஆறாத காயத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளன.

இதன் விளைவாகவே கொள்கையில் உறுதியோடு, இன விடுதலையை முதன்மைப் படுத்தி, நீதியின் வழி நின்று செயலாற்ற தமிழ் மக்கள் கூட்டணி என்கின்ற கட்சியை நிறுவவேண்டியது காலத்தின் கட்டாயமாகிற்று. இவ்வருடம் ஆயிரம் பிறை கண்ட அற்புதப் பெருமையை எதிர்நோக்கியுள்ள என்னால் இந்தக் கட்சியை நானாகநடத்த முடியாது. உங்கள் அனைவரதும் அயராத உழைப்பும் ஒத்துழைப்பும் பொறுமையுமே அதனைச்செய்ய முடியும்.

தமிழர்களின் சமூக மேம்பாட்டுக் கட்டமைப்புக்களின் தலைமையகமாகவும் தமிழர்களின் அரசியல் கோட்டையாகவும் கோலோச்சிய கிளிநொச்சி மாநகரம் தொடர்ந்தும் கொள்கை வழிநின்று, இனவாத சக்திகளினதும் அதற்குத் துணைபோகும் தரப்புகளினதும் சதிவலைகளை முறியடித்து மண்ணின் மகத்துவத்தைக் காத்து, தமிழ்த் தேசிய விடுதலையை முன்னெடுப்பதில் முன்னுதாரணமாக நீங்கள் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையிலேயே கிளிநொச்சியில் இன்று இந்தப் பணிமனை உத்தியோகபூர்வமாகத்திறந்து வைக்கப்பட்டுள்ளது.



தமிழ் மக்களின் உரிகைளை வென்றடுப்பதற்கான தமிழ் மக்கள் கூட்டணியின் அரசியல், பொருளாதார, சமூக ரீதியான செயற்பாடுகளில் கிளிநொச்சி மக்கள் முழுமையான அளவில் பங்குபற்றிஎம்மைபலப்படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். எமது மக்களுக்கு எதிரான இனப்படுகொலை திட்டமிடப்பட்டவகையில் வன்னியில் மேற்கொள்ளப்பட்டபோதும் பீனிக்ஸ் பறவை போல புத்துயிர்பெற்று இன்றைய தமிழ்மக்களின் அரசியல்போராட்டத்தின் முதுகெலும்பாக வன்னி மக்கள் செயற்பட்டு வருவதைக் கண்டுநான்வியப்படைந்துள்ளேன்.

பல வருடங்களாக வீதிகளில் நின்று நீங்கள் பற்றுறுதியுடன் மேற்கொண்டுவரும் பல்வேறு போராட்டங்களைக் கண்டு கொண்டுதான் இருக்கின்றேன். அத்துடன் கண்டு நான் உள்ளக்கிளர்ச்சி அடைந்திருக்கின்றேன். உங்கள் போராட்டங்கள் ஒருபோதும் வீண் போகா. உங்கள் போராட்டங்களுக்கான எம்மாலான உதவிகளை வழங்கும் வகையிலும் உரிமைகளை வென்றடுப்பதற்கான எமது செயற்பாடுகளுக்கு உங்களின் உதவிகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையிலுமே இன்று இந்தப் பணிமனை திறந்துவைக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் எமது இந்தப் பணிமனையுடன் இணைந்து எமது மக்களின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியான அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

அத்துடன் இந்நிகழ்விலும், கட்சி சார் செயற்பாடுகளிலும், தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்தும் பணியில் எம்மோடு பயணிக்க அனைவரையும் அன்புரிமையுடன் அழைத்து நிற்கின்றேன்.

மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றாமல் பல்வேறு ஏமாற்று வழிமுறைகளை இலங்கை அரசு கையாண்டு ஏமாற்றிவந்தநிலையில் அவற்றுக்கு எதிராகத் தொடர்ச்சியாக உண்மை நிலைமைகளை எடுத்துக்கூறி நீங்கள் நேர்கொண்ட போராட்டங்களும் அரசியல் செயற்பாடுகளுமே ஐ. நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சில சாதகமான விடயங்கள் உள்ளடக்கப்படுவதற்கு காரணமாக அமைந்திருக்கின்றன. இலங்கையில் என்ன நடைபெற்று வருகின்றன, உண்மைநிலைமை என்ன, மக்களின் உணர்வுகள் என்ன என்பவை எல்லாம் சர்வதேச சமூகத்துக்கு எட்டியிருக்கின்றது என்பதையே மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்தப் பரிந்துரைகள் காட்டுகின்றன.

அதாவது, போர்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகத்தன்மையான உள்ளக விசாரணை நடைபெறவில்லை என்பதால் போர்க்குற்றம் மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபட்டவர்களை விசாரணை செய்து வழக்கு தொடரும் நடவடிக்கைகளை உறுப்பு நாடுகள் மேற்கொள்ளவேண்டும் என்று ஐ. நா மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகம் தனது இலங்கை தொடர்பான அறிக்கையில் உறுப்பு நாடுகளுக்குப் பரிந்துரைத்திருக்கின்றது.

சித்திரவதை,வலிந்துகாணாமல் செய்யப்படுதல், போர்குற்றங்கள் அல்லது மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை குறிப்பாக சர்வதேச நியாயாதிக்கக் கோட்பாடுகளுக்கு அமைவாக விசாரணை செய்து வழக்கு தொடரநடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் மனிதஉரிமைகளை கண்காணிப்பதற்கும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், மனித உரிமைகள் சபை மற்றும் ஏனைய மனிதஉரிமைகள்பொறிமுறைகள் ஆகியவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றும் பொருட்டும் ஐ. நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசு ஐ. நா மனித உரிமைகள் அலுவலகத்துக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர்தமிழ்மக்கள்பேரவையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர் உட்பட சம்பந்தப்பட்ட பல தரப்புக்களுக்கும் நாம் அனுப்பிய தீர்மானத்தில் இந்த விடயங்களையும் உள்ளடக்கியிருந்தோம். இவை கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றமை மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் பரிந்துரைகளை நாம் வரவேற்கிறோம்.

அதேவேளை, இலங்கை விடயத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லவேண்டும் என்றும் நாம் எமது தீர்மானத்தில் வலியுறுத்தி இருக்கின்றோம். ஐ. நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை இலங்கை நிறைவேற்றுவதற்குத் தவறி இருக்கும் நிலையில் இந்த விடயத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லவேண்டியதன் அவசியத்தை சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழுவும் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை விடயம் தொடர்பில் ஐ. நா மனித உரிமைகள் சபை விசேட பிரதிநிதி ஒருவரை நியமனம் செய்யவேண்டும் எனப் பல தமிழ்க் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. ஆகவே எமது இந்த வலியுறுத்தல்கள் நடைமுறைக்கு வரும் வகையில் இங்குள்ள தமிழ் மக்களும் புலம்பெயர் தமிழ் மக்களும் தமது அரசியல், ராஜதந்திர செயற்பாடுகளை வகுத்து செயற்படவேண்டும்.

தன்னாட்சி - தற்சார்பு -தன்னிறைவே எமது தாரக மந்திரம் -என்றார். (ஐ)

# இலங்கைக்குக் கடன் வழங்க பின்னடிக்கின்றது சீன அரசு!

## சரத் அமுனுகம குற்றச்சாட்டு



இலங்கை அரசுக்கு, முன்னரைப் போன்று இலகுவாகவும் விரைவாகவும், கடன்களை வழங்குவதற்குச் சீனா தயாராக இல்லைஎன்றுமுன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர், கடந்த காலங்களில் இலங்கைக்கான கடன்களைச் சீனா துரிதமாக வழங்கியது.

இப்போது, சீனா கடன்களை வழங்க தாமதிக்கிறது. மேலதிக நிபந்தனைகளையும் விதிக்கிறது. இதற்குப்பிரதான காரணம், தற்போதைய அரசு சீனாவை விமர்சித் தமை தான்.

இலங்கையின் கடன் சுமைக்குச்சீனாகாரணம்அல்ல.சீனாவை விட ஜப்பானிடம் இருந்தே அதிக கடன்களை பெற்றிருக்கிறது இலங்கை-என்றார். (ஐ)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## சர்வதேச தலையீடு எதனால்?

நாட்டின் இறைமை தொடர்பில் நீலிக் கண்ணீர் வடித்திருக்கின்றார் பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள்.

இலங்கை தொடர்பாக - இலங்கையின் செயற்பாடுகள் - சம்பந்தமாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் மிக்செல் பச்லெட் அம்மையார், ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் வெளியிட்ட அறிக்கை தொடர்பிலேயே அவர் இந்தக் குதிகுதித்திருக்கின்றார்.

நாட்டின் இறைமையில் இன்று சர்வதேசம் பலவந்தமாகத் தலையிடும் துர்ப்பாக்கிய நிலைமை வந்திருப்பதாக அவர் கவலை வெளியிட்டிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமைக்கு முகம் கொடுக்க முடியாமல் சர்வதேச நாடுகளின் சார்பில் நோர்வேயின் பங்களிப்புடன் சமரசம் பேசி புலிகளுடன் ஒஸ்லோ உடன்பாட்டுக்கு வந்தவர்தான் இந்தப் பேராசிரியர்.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் வடக்கு, கிழக்குக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றை வழங்குவோம் என்று நோர்வேயின் நேரடி அனுசரணையுடன் தமிழர்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளோடு இலங்கை அரசு உடன்பாடு கண்டபோது, அந்த இலங்கை அரசுக் குழுவுக்குத் தலைமை வகித்தவர் இந்தப் பேராசிரியர்தான்.

இப்போது சுயநிர்ணயமும் இல்லை, சமஷ்டியும் இல்லை என்று பேரினவாதம் பேசுபவரும் அவர்தான்.

சர்வதேச ரீதியில் இலங்கை இந்திய ஒப்பந்தம், ஒஸ்லோ உடன்பாடு (அல்லது ஒஸ்லோ அறிக்கை) போன்று தாம் இணக்கம் கண்ட, சம்மதம் தெரிவித்த உறுதிமொழிகளை நிறைவேற்றாதமையின் விளைவுதான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இந்த அறிக்கை.

இப்படி சர்வதேச மட்டத்திலும் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத இலங்கைத் தரப்பின் செயற்பாடுதான் இப்போது அதற்குப் பெரு வினையாக வந்து இறங்கியிருக்கின்றது.

2015 செப்ரெம்பரில் 30/1 தீர்மானம் மூலமும், 2017 மார்ச்சில் 34/1 தீர்மானம் மூலமும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குத் தான் வழங்கிய உறுதிமொழிகளை தனது கடப்பாடுகளை தனது பொறுப்புக்களை நிறைவு செய்வதற்கு இலங்கை மறுத்து நிற்பதனாலேயே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை இலங்கைக்கு எதிராக அவ்வளவு காட்டமாக அமைந்தது.

இலங்கை நிறைவேற்றாத விடயங்கள் என்று ஆணையாளர் சுட்டிக்காட்டும் அம்சங்கள் ஏதும் சர்வதேச சமூகம் இலங்கை மீது வலிந்து திணித்தவை அல்ல என்று கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

இலங்கை தானும் முன்னின்று, தனது நாடு தொடர்பாகப் பிரேரித்து நிறைவேற்றிய தீர்மானத்தின் வாசகங்களை நிறைவு செய்யும்படியே சர்வதேச சமூகம் இலங்கையை எதிர்பார்க்கின்றது. அப்படித் தானே பிரேரித்து நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையிலான கடப்பாடுகளை இலங்கை நிறைவு செய்ய மறுத்து நிற்பதையே ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் வன்மையாகக் கண்டித்திருக்கின்றார். -

2015 செப்ரெம்பரிலும், 2017 மார்ச்சிலும் 30/01 மற்றும் 34/01 தீர்மானங்களை இலங்கை தானும் சேர்ந்து பிரேரித்து நிறைவேற்றிய சமயத்திலும், அதன் பின்னரும், இன்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு பெரும் நண்பர் போல செயற்படும் இலங்கையின் ஜனாதிபதியும், சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன திரும்ப திரும்ப நாட்டு மக்களுக்குப் பெருமையுடன் கூறிக் கொண்ட ஒரு விடயத்தை இப்போது நினைவுபடுதத விரும்புகின்றோம்.

*"எங்கள் நாட்டின் முன்னாள் தலைவர்கள் சிலர் மின்சாரக் கதிரையில் அமர்த்தித் தண்டிக்கப்படும் பேராபத்தை முறியடித்தவர்கள் நாங்களே!"* என்று அப்போது இந்த நாட்டின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேடைக்கு மேடை முழங்கியமை பேராசிரியர் பீரிஸுக்கு ஞாபகத்தில் கட்டாயம் இருக்கும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரின் கீழ் பணியாற்றிய படைத் தொகுதியினரையும் தாம் வெற்றிரகமாகப் பாதுகாத்தமையையே - காபந்து பண்ணியமையையே - இப்படிப் பெருமையாகக் கூறிக் கொள்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பது அரசியலில் அரிச்சுவடி பாடம் படித்தவர்களுக்கே புரிந்திருந்தது. அது பேராசிரியருக்கும் புரிந்திருக்கும்.

அன்று மஹிந்த தரப்பினரைப் பாதுகாப்பதற்கு - சர்வதேச விசாரணைப் பொறிமுறையில் நேரடியாகச் சிக்காமல் தவிர்ப்பதற்கு - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இலங்கை அரசு எடுத்த தந்திரோபாய இராஜதந்திரக் காய்நகர்த்தல்தான் ஜெனீவாவில் 30/01 மற்றும் 34/01 தீர்மானங்களுக்கு இலங்கையும் சேர்ந்து அனுசரணைப் பணி வகித்தமையாகும்.

அப்போது இலங்கைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த சர்வதேச அழுத்தத்தைச் சாமாளிப்பதற்காக, இலங்கை தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் 2015 இலும், 2017 இலும் கொண்டு வரப்பட்ட இரண்டு பிரேரணைகளுக்கும் தானே முன்னின்று அனுசரணைப் பணி வகித்து, பிரேரித்து, ஏகமனதாக நிறைவேற்றச் செய்தது இலங்கை அரசு.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் போன்றோரின் பெருந்தலைவராக இன்று விளங்கும் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குழாத்தினரை மின்சாரக் கதிரையில் அமர்த்தாமல் காப்பாற்றுவதற்காக சர்வதேச மட்டத்தில் - ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் - அன்று அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றத் தவறியமையே இன்று அதற்கு வினையாக வந்து சூழ்ந்து நிற்கின்றது. அதுவே, இலங்கையின் இறையாண்மையில் சர்வதேசம் பலவந்தமாகத் தலையிடும் சூழலை உருவாக்கியுள்ளது! அதை பீரிஸ் புரிந்து கொண்டால் நல்லது.

# மத்தள விமான நிலையத்தை இந்தியாவுடன் இணைந்து இயக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 11

இந்தியாவின் விமான நிலைய அதிகார சபையுடன் இணைந்து, மத்தள அனைத்துலக விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை பச்சைக்கொடி காண்பித்துள்ளது.

மத்தள விமான நிலையத்தை இந்தியாவின் விமான நிலைய அதிகார சபையுடன் இணைந்து செயற்படுத்துவதற்கான இறுதி உடன்பாட்டை எட்டுவதற்கான முறைப்படியான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கே அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

மத்தள விமான நிலையத்தை இயக்குவதற்காக இந்திய விமான நிலைய அதிகார சபை முன்வைத்த யோசனையை நடைமுறைப்படுத்தல் என்ற தலைப்பிலான அமைச்சரவைப் பத்திரம் கடந்த புதன்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மங்கள சமரவீர, அர்ஜுன ரணதுங்க ஆகியோர் இணைந்து இந்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தனர்.

இதற்கமைய, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுக்களை நடத்துவதற்கான குழு, இலங்கை அரசின் சார்பில் இந்திய அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுடன் முறைப்படியான பேச்சுக்களை நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களின் மூலம், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உடன்பாடு இறுதி செய்யப்படவுள்ளது. (ஐ)

டிபென்டர் வாகனத்தால் மோதுண்ட

# பொலிஸ் பொறுப்பதிகாரி சிகிச்சை பயனின்றிச் சாவு

கொழும்பு, மார்ச் 11

விபத்தில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பொரளை பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி சரத் சதந்திர (வயது - 51) நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பொறுப்பதிகாரி கடந்த 24ஆம் திகதி பம்பலப்பிட்டிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது, டிபென்டர் வாகனம் ஒன்று மோதியது. இவர் மீது மோதிய டிபென்டர் வாகனம் அப்பகுதியிலிருந்து தப்பிச் சென்றிருந்தது.

இந்தச் சம்பவத்தையடுத்து, டிபெண்டர் வாகனத்தின் சாரதி உள்ளிட்ட 8 பேர் கைதுசெய்யப்பட்டனர். எனினும், சாரதி மட்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு ஏனைய 7 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களுள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் மகனும், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சுமிந்த ஆட்டிகலவும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியாவில் சிறப்பாக நடந்தது தமிழ்மாருதம் பண்பாட்டு நிகழ்வு






வவுனியா, மார்ச் 11

கலை இலக்கியச்செயற்பாடுகளை மையமாகக்கொண்டு இயங்கி வரும் தமிழ் மாமன்றம் வருடாந்தம் நடத்தும் பண்பாட்டு பெருவிழாவான தமிழ்மாருதம் வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தில் நேற்றும் நேற்றுமுன் தினமும் சிறப்பாக நடைபெற்றது.

இம்முறை தமிழகத்திலிருந்து பிரபல பேச்சாளரும், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞருமாகிய இலக்கியசுடர் த. இராமலிங்கம் நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

சனி காலை 8.30 மணிக்கு வவுனியா விபுலானந்தர் சிலை முன்பிருந்து ஆரம்பமாகிய பண்பாட்டு ஊர்வலம் வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தை வந்தடைந்தது. ஏனைய நிகழ்வுகளான வில்லுபாட்டு, ஆடலரங்கம், நாடகம், விவாதம் என்பனவற்றுடன் சனிக்கிழமை அமர்வு நடைபெற்றிருந்தது.

இதன்போது இலங்கையின் பிரபல புத்தக நிலையங்களின் ஒன்றிணைவில் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும் இடம்பெற்றிருந்தது.



இரண்டாம் நாள் அமர்வுகள் நேற்று நகரசபை மண்டபத்தில் பல்வேறு கலை நிகழ்வுகளுடன் நடைபெற்றன. நிகழ்வில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கலைத்துறைசார்ந்தோர், மாணவர்கள், மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

# கிளிநொச்சி வைத்தியசாலைப் பணி விடுமுறை நாள்களிலும் விஸ்தரிப்பு

கிளிநொச்சி, மார்ச் 11

பொதுமக்களின் நலன் கருதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு ஞாயிறு உள்ளிட்ட விடுமுறை நாள்களில் மதியம் 12 மணி வரை திறக்கப்பட்டிருக்கும் எனப் பணிப்பாளர் மருத்துவர் காண்டீபன் தெரிவித்தார்.

இதுவரை காலமும் விடுமுறை நாட்களில் முற்பகல் 10 மணிவரையே வெளிநோயாளர் பிரிவில் பொது மக்கள் சிகிச்சை பெற்று வந்தனர். இதனால் பெருமளவான மக்கள் சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைவாக மதியம் 12 மணி வரை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை வழங்குவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இனி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் விடுமுறை நாள்களில் மதியம் 12 பொது மக்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும் என மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் காண்டீபன் அறிவித்துள்ளார். (ஐ)

## நாளை

12.03.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: கார்த்திகை பி.இ. 01.57 வரை.
திதி : ஷஷ்டி பி.இ. 01.40 வரை.
சுபநேரம் : 10.52 - 12.22 வரை
இராகுகாலம் : 3.22 - 04.52 வரை

# சவேந்திர சில்வா நியமனத்துக்கு ஐ.நா. ஆணையாளர் கண்டனம்!

கொழும்பு, மார்ச் 11

இலங்கை இராணுவத் தலைமை அதிகாரியாக, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டதற்கு, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மிச்லே பச்செலெட் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தொடரில் எதிர்வரும் 20ஆம் திகதி இலங்கை தொடர்பான அறிக்கையை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மிச்லே பச்செலெட் சமர்ப்பிக்கவுள்ளார்.

15 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கை கடந்த வியாழக்கிழமை பகிரங்கப்படுத்தப்பட்டது.



அந்த அறிக்கையிலேயே, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் நியமனத்துக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவத்தின் 58 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக இருந்தவர் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா.

அவரது கட்டுப்பாட்டில் இருந்த படையினர், அனைத்துலக மனித உரிமைகள் சட்டம் மற்றும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களை மீறினார்கள் என்று, ஐ.நா. பொதுச்செயலர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையிலும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கையிலும், குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன என்றும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச் 11

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி யிலிருந்து மாலை 5.00 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் -**

காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிடடி , வறுத் தலைவிளான், வீம ன்காமம், பலாலி, காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதிய), பலாலி விமானப்படை ஓய்வுகால விடுதி ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

லக்ஸபானா வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும்

**மன்னரர் பிரதேசத்தில் –**

பெரிய கரைசல் ஆகிய பிரதேசங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

குமுழமுனை, கரியாலைபடுவான், அன்புபுரம், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், ஜெயபுரம், வேராவில், வலைப்பாடு, 651வது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படைமுகாம், இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ

# உள் விவகாரங்களில் தலையிட பிரிட்டனுக்கு உரிமையில்லை!

## சரத் வீரசேகர எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 11

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தொடரில், எமது நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு பிரிட்டனுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதை வலியுறுத்திக் கூற வுள்ளோம் என இராணுவத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப் பின் தலைவர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 15ஆம் திகதி ஜெனீவா செல்கின்றோம். நாங்கள் எம் தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காகவே போராடினோம். அவ்வாறிருக்க நாட்டுக்காகப் போராடிய இராணுவ வீரர்களை போர்க்குற்றவாளிகள் எனக்குறிப்பிட்டுச் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்துவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பிரிவினைவாத தமிழ் அரசியல்வாதிகளே இத்தகைய நிலையை ஏற்படுத்தியுள்ளனர்.



மேலும் ஆளுங்கட்சியாக இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவின்றி இந்த வருடத்துக்கான வரவு–செலவுத்திட்டத்தைநிறைவேற்றிக் கொள்ள முடியாது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்ற விடயங்களுக்கு அமைவாகச் செயற்படவேண்டிய அவசியம் ஐக்கிய தேசியக்கட்சிக்கு உள்ளது. அதனாலேயே சர்வதேசத்திடம் எமது இராணுவத்தினரைக் காட்டிக்கொடுப்பதற்கு முயற்சித்து வரு கின்றனர் – என்றார்.




# எம் செயல்களே நிலை வாழ்வை தீர்மானிக்கும்

இருமை நிலைப்பட்ட உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கும் நன்மையும் தீமையும் பொய்யும் உண்மையும் உயர்வும் தாழ்வும் நீதியும் அநீதியும் கலந்த மலிந்த சமூகத்திலே வாழ்வது சவால்கள் நிறைந்தது பலர் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டே வாழ்கிறார்கள். தன்னை அறிந்து தன் குறைகளைத் திருத்தி நிறை வாழ்வுப் பயணத்தை மேற்கொள்ள துணை புரியும் காலமே தவக் காலம்

கடவுளைப் பெருமைப்படுத்த மகிமைப்படுத்த வேண்டிய நாம் எம்மைப் பெருமைப்படுத்திக் கொள்ளவே அனைத்திலும் முனைந்து செற்படுகின்றோம். ஆனல் அப்படியாளவர்களின் வாழ்வு நிம்மதியற்ற அங்கலாய்ப்பான வாழ்வாக இருக்கும். நிம்மதியான உறக்கமோ, நோயில்லாத வாழ்வோ இவர்களிடம் காணப்படாது. ஆனாலும் மற்றவர்களை அடிமைப் படுத்தவே இவர்களின் மனங்கள் துடிக்கும். தீமைகள் தீமைகளையே உருவாக்கும். நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்வோம். எம் செயல்களே எமக்கு நீதிபதிகள்.

நிறையற்ற உலகிலேயே நிலையாய் நிலைத்திருக்க முடியாது. கருவறையிலே எம் கல்லறைகளும் தீர்மானிக்கப்படுகின்றன. அன்பின் வழியதே அகிலம், ஆணவம், அகம்பாவம், தற்பெருமையெல்லாம் சிறிது காலம் வெளிப்படலாம். ஆனாலும் அவை நிலைத்திருக்க முடியாது. இதனைத் தான் நாம் கண்கூடாகக் காண்கிறோம். அப்படி இருந்தும் மற்றவனை அடிமைப்படுத்தவே எம் வினைகள் செயற்படுகின்றன. அயலானை நேசிப்பதிலே ஆண்டவனின் அருள் தங்கி இருக்கின்றது. இறுதித் தீர்ப்பின் நாளிலும் நீதித் தீர்ப்பின் அளவுகோலாக இருப்பது ஏழையை நேசித்தாயா அவனுக்குச் செய்ததையே எனக்குச் செய்தாய். நன்மை செய்தினால் நிலை வாழ்வும் அநியாயம் செய்ததினால் அணையா நெருப்பான நரக வாழ்வும் பரிசாகும். என்பதை இயேசுவே தம் சீடர்களுக்கு கூறிவைத்தார்.

இயேசுவை பின்பற்ற வேண்டுமென்றால் அவர் வார்த்தை வாழ வேண்டும். அவர் பெயரால் பெருமைகளோ பரம்பரைகயோ பூர்வீகமோ பேசி நிலை வாழ்வை எவரும் அடைந்துகொள்ள முடியாது. தெளிவாகக் கூறும் இறை வார்த்தை வழியில் பிறருக்கு தீங்கு செய்யாத வாழ்வை எவர் மேற்கொண்டால் இறை அருளும், ஆசியும் அவர்களை வந்தடையும். விசுவாசிப்போம் வாழ்வோம் இறை அருள் பெறுவோம்.

**அன்ரனி பீற்றர்**
**(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்)**

# பெண்கள் எழச்சி நிகழ்வு நாளை

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் உலகப் பெண்கள் எழுச்சி நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்துனராக வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கமும் விசேட விருந்தினராக யாழ் அரச அதிபர் நா.வேதநாயகனின் பிரதிநிதியாக யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி செல்வராணி நிக்கொலஸ்பிள்ளையும் கலந்து கொள்வர். வல்லமை சமூக மாற்றத்துக்கான இலக்கத்தைச் சேர்ந்த ரஜனி இரா ஜேஸ்வரி விசேட உரை நிகழ்த்து வார்.

கலை நிகழ்வுகளுடன் சேவையாளர் கௌரவிப்பும் இடம்பெறும். (இ

# இளம் கலைஞர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசு: நீங்களும் விண்ணப்பிக்கலாம்

வட மாகாணத்தில் வாழ்ந்து வருகின்ற இளம் கலைஞர்களின் கலைச்சேவையை ஊக்குவிக்கும் முகமாக 40 வயதிற்குட்பட்ட துறை சார்ந்த ஆளுமைமிக்க இளம் கலைஞர்களுக்கான ஊக்குவிப்புப் பரிசு இவ் வருடம் நடைபேறவுள்ளன வட மாகாண பண்பாட்டுப்பெருவிழாவில் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

கவிதை, சிறுகதை, நாவல், வாத்தியக் கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம் போன்ற) நடனம், ஓவியம், கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்து நடைக்கூத்து), நாடகம் (எழுத்துரு, நடிப்பு, நெறியாள்கை) இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு), ஊடகம மற்றும் திரைப்படத்துறை, இசை நாடகம், புகைப்படம், கைவினை போன்ற துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 2018.12.31 அன்று நாற்பது வயதினைப் பூர்த்தி செய்யாத கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும் விண்ணப்பப்படிவம் மற்றும் விவரங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று 22.03.2019 இற்கு முன்னர் விண்ப்பிக்க முடியும் என்று யாழ் பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன் அறிவித்துள்ளார். (இ

# வாட்டி வதைக்கும் வெப்பம் மே மாதம் வரை தொடரும்!

கொழும்பு. மார்ச் 11

நாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு. கிழக்கு, வட மத்திய, வட மேல் மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் வெப்பத்துடனான வானிலை நிலவும் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மே மாதம் வரை வெப்பத்துடனான வானிலை நீடிக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எனவே. அதிகளவு நீரைப் பருகுமாறு மக்கள் கோரப்பட்டுள்ளனர். பகல்வேளைகளில் பொதுவெளியில் அவதானத்துடன் பயணிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஆளில்லா மற்றொரு பாக். விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக இந்தியா அறிவிப்பு

புதுடில்லி,மார்ச் 11


ராஜஸ்தான் மாநிலத்தை ஒட்டிய இந்திய எல்லைப் பகுதியில் அத்துமீறிப் பறந்த பாகிஸ்தானின் ஆளில்லா உளவு விமானத்தை இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தினர் என்று இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

போர் பதற்றம் நீடிப்பதால் பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், காஷ்மீர் மாநில எல்லைப் பகுதிகளில் முப்படைகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானில் இயங்கிவரும் ஜெய்ஷ்-இ-முக மது தீவிரவாத அமைப்பு கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் நடத்திய கார் வெடி குண்டுத் தாக்குதலில் 40 இந்தியத் துணை இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

இதற்குப் பதிலடியாக கடந்த மாதம் 26 ஆம் திகதி பாகிஸ்தான் எல்லைக்குள் 50 கி.மீ. தூரத்துக்கு பறந்த இந்திய போர் விமானங்கள், 3 ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத முகாம்களை குண்டுகளை வீசி அழித்தன. இதில் 300-க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என இந்திய அரசு அறிவித்தது.

இதைத் தொடர்ந்து கடந்த 27 ஆம் திகதி பாகிஸ்தான் விமானப்படையின் போர் விமானங்கள் காஷ்மீர் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தன. அந்த விமானங்களை இந்தியப் போர் விமானங்கள் விரட்டியடித்தன. இந்திய விமானி அபிநந்தன் பாகிஸ்தானின் எவ்.16 ரக போர் விமானத்தைச் சுட்டு வீழ்த்தினார். இதற்கான ஆதாரம் இருப்பதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.




## எல்லையில் போர் பதற்றம் நீடிப்பு

### பாகிஸ்தான் அத்துமீறல்

இந்திய விமானப் படை தாக்குதலைத் தொடர்ந்து காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் இந்திய இராணுவ நிலைகளைக் குறிவைத்து பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு இந்தியஈராணுவமும் தகுந்த பதிலடி கொடுத்து வருகிறது.

கடந்த பிப்ரவரி 26 ஆம் திகதி குஜராத்தின் கட்ச் பகுதியிலும், கடந்த 4 ஆம் திகதி ராஜஸ்தானின் பிகானிர் எல்லைப் பகுதியிலும் அத்துமீறி பறந்த பாகிஸ்தானின் ஆளில்லா உளவு விமானங்களை இந்திய விமானப் படை சுட்டு வீழ்த்தியது.

இந்நிலையில் ராஜஸ்தானின் ஸ்ரீகங்கா நகர் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் உளவு விமானம் ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை 5.40 மணிக்கு நுழைந்தது. இதையடுத்து உஷாரான எல்லை பாதுகாப்புப் படை வீரர்கள் அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தினர்.

### ராணுவ தளபதி ஆய்வு

போர் பதற்றம் நீடிப்பதால் குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் இராணுவம், கடற்படை, விமானப்படை உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இராணுவத் தலைமைத் தளபதி பிபின் ராவத் சில நாள்களுக்கு முன்பு காஷ்மீர் எல்லைப் பகுதியில் போர் ஆயத்த நிலை குறித்து ஆய்வு நடத்தினார். இராணுவத்தின் கிழக்கு பிராந்திய தலைமையகம் அமைந்துள்ள ஹரியானாவின் சண்டிமந்திருக்கு அவர் நேற்று சென்றார்.

அங்கு பாகிஸ்தானை ஒட்டிய பஞ்சாப் மாநிலத்தின் எல்லைப் பகுதி பாதுகாப்பு நிலைவரம் குறித்து விரிவாக ஆய்வு நடத்தினார்.

### சர்வதேச நாடுகள் அறிவுரை

அணு ஆயுத நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் இடையே பதற்றத்தைத் தணிக்க அமெரிக்கா தரப்பில் சமரச பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், துருக்கி, ஜோர்டான் உள்ளிட்ட நாடுகளும் போர்ப் பதற்றத்தைத் தணிக்க இரு நாடுகளையும் அறிவுறுத்தியுள்ளன.

சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ இதுபற்றி வெள்ளியன்று கூறும்போது, இந்தியாவும் பாகிஸ்தானும் அமைதி காக்க சீனா வலியுறுத்தி வருகிறது. போர்ப் பதற்றத்தை தணித்ததில் சீனா முக்கிய பங்காற்றி உள்ளது என்று தெரிவித்தார்.

அமெரிக்க இராணுவ மூத்த தளபதி ஜோசப் வோட்டல் கூறும்போது, பாகிஸ்தானில் செயல்படும் தீவிரவாத அமைப்புகளால்தான் இந்தியா, பாகிஸ்தான் இடையே பதற்றம் ஏற்படுகிறது. இதை தடுக்க தீவிரவாத அமைப்புகளை முற்றிலுமாக ஆழிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அமெரிக்காவின் முன்னணி நாளிதழான 'நியூயோர்க் டைம்ஸ்' தலையங்கத்தில் தீவிரவாத அமைப்புகளை அழிக்க பாகிஸ்தான் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இதுதான் பிரச்சினைக்கு காரணம் என்று பகிரங்கமாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.


# ஜாலியன்வாலா பாக்கில் 1600 பேரின் படுகொலைக்கு நூறு ஆண்டுகள் கழித்து மன்னிப்புக் கோரும் பிரிட்டன்

ஆங்கிலேயர் ஆட்சியில் ஏப்ரல் 13, 1919 இல் பஞ்சாபின் ஜாலியன் வாலாபாக்கில் நடந்த படுகொலையில் சுமார் 1600 பேர் கொல்லப்பட்டனர். இதன் நூறாவது நினைவு நாள் வருவதை முன்னிட்டு பிரிட்டிஷ் அரசு இந்த படுகொலைக்கு மன்னிப்பு கேட்கத் தயாராகிறது எனக்கூறப்படுகிறது.

ஆங்கிலேயரிடம் இந்தியா அடிமைப்பட்டிருந்த போது, 1919 இல் ரவுலட் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

இதை எதிர்க்கும் வகையில், அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக் எனும் இடத்தில் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் கூடினர். ஏப்ரல் 13, 1919 இல் ஞாயிற்றுக் கிழமையான அன்று சீக்கியர்களின் புது வருடமான பைசாக்கி பண்டிகை நாளாகவும் இருந்தது. ஆங்கிலேயரை எதிர்த்து சுதந்திரப் போராட்டப் பாடல்களையும் அந்த கூட்டத்தினர் பாடிக்கொண்டிருந்தனர். அங்கு தன் படையுடன் வந்த ஆங்கிலேய அதிகாரியான ஜெனரல் டயர், கூட்டத்தினர் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டார்.

இதில் 1600க்கும் மேற்பட்டோர் பலியாகினர். ஆயிரத்திற்கும் அதிமானவர்கள் படுகாயம் அடைந்தனர். பிரிட்டிஷ் வரலாற்றில் அவமானமாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்திற்கு அந்நாட்டு அரசு மன்னிப்பு கேட்க வேண்டும் என சமீப ஆண்டுகளாகக் குரல்கள் எழுந்து வருகின்றன.



இந்நிலையில், அந்த படுகொலை சம்பவம் நடந்து வரும் ஏப்ரல் 13 இல் 100 ஆண்டு முடிய உள்ளது. இதையொட்டி பிரிட்டிஷ் நாட்டு நாடாளுமன்றக்கூட்டத்தை அதன் அரசு கூட்டுகிறது.

இதில், இந்திய வம்சாவளி உறுப்பினர்கள் ஜாலியன்வாலா பாக் சம்பவத்திற்கு பிரிட்டிஷ் அரசு மன்னிப்பு கேட்க வேண்டும் என வலியுறுத்த உள்ளனர். அந்த சமயத்தின்போது சில இந்தியர்களையும் பார்வையாளர்களாக அழைக்க இந்திய வம்சாவளி உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதற்காக, அவர்களில் ஒருவரான லும்பா என்பவர், இந்தியாவின் பிரபல தொழிலதிபரான சஞ்சய் டால்மியாவிற்கு இமெயில் மூலம் அழைப்பு அனுப்பியுள்ளார்.

இந்த அழைப்பு மெயிலில் குறிப்பிட்டிருப்பதாவது, ஜாலியன் வாலாபாக் படுகொலை மீது விவாதிக்க வேண்டும் என நான் எழுப்பிய கோரிக்கைக்கு சக உறுப்பினர்களான தேசாய் பிரபு, பிலிமோரிய. பிரபு, போரன்ஸ் வர்மா பிரபு, சூரி பிரபு, ப்ரோன்ஸ் நோர் தோவர் பிரபு, அல்டன் பிரபு, மோர்கன் பிரபு, கோலின் பிரபு மற்றும் மோவ்ஸன் பிரபு ஆகியோரும் ஆதரவளித்துள்ளனர்.

இவர்களும் அந்த சம்பவத்திற்கு பிரிட்டிஷ் அரசு மன்னிப்பு கோர வேண்டும் என மனப்பூர்வமாக சம்மதித்துள்ளனர்'' எனக் கூறப்பட்டுள்ளது.

இதேபோல, மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பிரிட்டிஷில் வாழும் பல்வேறு பொது அமைப்புகள், சீக்கியர்களின் சர்வதேச சங்கங்களும் கடிதங்கள் எழுதியுள்ளன. இவற்றையும் ஏற்று ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு மன்னிப்பு கேட்க பிரிட்டிஷ் அரசு தயாராகி வருவதாகத் தெரியவந்துள்ளது.

இந்த மன்னிப்பு கேட்கும் நிகழ்வின்போது பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் அழைப்பாளர்களாக முக்கிய இந்தியர்களையும் அழைக்கிறது.

ஜாலியன்வாலா பாக் எனும் மைதானப் பகுதி அமிர்தசரஸில் உள்ள சீக்கியர்களின் பொற்கோயில் அருகே அமைந்துள்ளது. சீக்கியர் ஆட்சியின் கீழ் இந்த மைதானத்தின் உரிமையாளராக ஹிம்மத் சிங் என்பவர் இருந்தார்.

இவர், தற்போது பஞ்சாபின் ஃபதேகர்சாஹேப் மாவட்டத்தில் உள்ள ஜாலா எனும் கிராமத்தை சேர்ந்தவர். இதனால், அது ஜாலா வாலா மைதானம் எனவும், பிறகு அது தோட்டமாகவும் இருந்ததால் பாக் என்றும் அழைக்கப்பட்டது.

இந்த பெயரும் காலப்போக்கில் ஜாலியன்வாலா பாக் என்றாகி விட்டது. ஆங்கிலேயர் நடத்திய படுகொலைக்கு பின் இந்த பகுதி மத்திய அரசின் இந்திய தொல்பொருள் ஆய்வகத்தின் நிர்வாகத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது.

# மீண்டும் ஏவுகணைச் சோதனைக்கு தயார் செய்கின்றது வட கொரியா?



வட கொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனைக்குத் தயாராகி வருகிறது என்பதைக் காட்டும் செயற்கைகோள் படங்கள் வெளியாகியமையை அடுத்து அது சர்வதேச உறவுகள் விடயத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

வடகொரியா தொடர்ந்து அணுகுண்டு சோதனைகளை நடத்தி வந்தது. ஏவுகணை சோதனைகளையும் தொடர்ச்சியாக நடத்தி வந்து உலக நாடுகளை அதிர வைத்தது.

இந்தச் சூழ்நிலையில் அமெரிக்கா – வட கொரியா இடையில் நடந்த சமரச முயற்சிகள் உரிய பலனைத் தரவில்லை.

இந்த நிலையில் வடகொரியா மீண்டும் தனது அணு ஆயுதப்பாதையில் அடியெடுத்து வைப்பதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கி உள்ளன எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

வடகொரியாவின் தலைநகர் பியாங்யாங் நகருக்கு அருகே அமைந்துள்ள சானும்டாங்க் ஏவுதளத்தில் இருந்து றொக்கெட் அல்லது ஏவுகணையை ஏவுவதற்கான பணிகள் நடந்து வருவதை செயற்கைகோள் படங்கள் காட்டுகின்றன எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அந்தப் படங்களில் சானும்டாங்க் ஏவுதளத்தில் பெரிய அளவிலான வாகன நடமாட்டம் இருப்பது தெரிய வந்தது. கடந்த காலத்தில் இப்படி காணப்பட்டபோது அந்த நாடு, ஏவுகணை அல்லது றொக்கெட் சோதனை நடத்தி இருக்கிறது. எனவே இப்போது மறுபடியும் அந்த நாடு ஏவுகணை அல்லது றொக்கெட் சோதனையில் ஈடுபடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் வடகொரியாவின் பிரதான றொக்கெட் ஏவுதளமான சோஹேயும் மறுகட்டமைப்பு செய்யப்பட்டுள்ளதாக இந்த வாரத்தின் தொடக்கத்தில் தெரியவந்தது நினைவுகூரத்தக்கது.

அதையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கூறுகையில், நமது புரிதலில் இருந்து விலகிச்செல்கிற வகையில் அவர் (வடகொரிய தலைவர் கிம்) ஏதாவது செய்தால் அது எனக்கு ஏமாற்றத்தைத் தரும். இருப்பினும் என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். அவர்கள் மீண்டும் சோதனைகளை நடத்தத் தொடங்கினால் அது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தரும் என்று குறிப்பிட்டார்.

# ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா 4 ஆவது திருமணத்துக்கு தயார்

## இம்முறை பிரெஞ்சுக் கோடீஸ்வருடன்

லொஸ் ஏஞ்சல்ஸ், மார்ச்11

ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலி, பிரான்ஸ் கோடீஸ்வரரை மணக்க உள்ளார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.



பிரபல ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலி (வயது 43). இவர் 1996 ஆம் ஆண்டு ரிவி பிரபலம் ஜானி லீ மில்லரை திருமணம் செய்தார். 2000 ஆம் ஆண்டில் விவாகரத்து செய்தார்.

பின்னர் நடிகர் பில்லி பொப் தொம்டனை 2 ஆவது திருமணம் செய்தார். 2000 ஆம் ஆண்டு நடந்த இந்த திருமணம் 3 ஆண்டில் முடிவுக்கு வந்தது.

3 ஆவது முறையாக நடிகர் பிராட் பிட்டை 2014 இல் திருமணம் செய்து கொண்டார். இந்த திருமணமும் 2016 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது.

பிராட் பிட்டைப் பொறுத்தமட்டில், அவர் தனது முன்னாள் மனைவி ஜெனிபர் ஆனிஸ்டனுடன் இணைந்து வாழ முடிவு செய்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த நிலையில் ஏஞ்சலினா ஜோலி 4ஆவது திருமணத்துக்குத் திட்டமிட்டிருப்பதாக தெரிய வந்துள்ளது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கோடீஸ்வரர் சேட்டோ மிராவல் என்பவரை ஏஞ்சலினா ஜோலி திருமணம் செய்து கொள்ளப்போகிறார் எனவும், பிரான்ஸில் குடியேறப்போகிறார் எனவும் 'லைவ் அண்ட் ஸ்டைல்' பத்திரிகை செய்தி வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஏஞ்சலினா ஜோலிக்கு 6 குழந்தைகள் இருக்கின்றமையும், அதில் சில அவர் தத்து எடுத்த குழந்தைகள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

# திமிங்கலத்துடன் படகு மோதியதில் ஜப்பானில் 80 பயணிகள் காயம்



ஜப்பானில் கடல் உயிரினம் மீது படகு மோதியதில் 80 பேர் காயம் அடைந்துள்ளனர். அவர்களில் சிலர் மிகவும் மோசமான நிலையில் உள்ளனர்.

ஜப்பானில் சொகுசு படகு ஒன்று 125 பேருடன் நிகாடா துறைமுகத்தில் இருந்து சாடோ தீவை நோக்கி சென்று கொண்டிருந்தது.

மிகவும் வேகமாக நடுக்கடலில் அந்த படகு சென்று கொண்டிருக்கும் போது திடீரென ஒரு பொருள் மீது பயங்கரமாக மோதியது.

வேகமாகச் சென்ற படகு திடீரென ஒரு பொருள் மீது மோதியதால் பயணிகள் தடுமாறினார்கள். முன்னால் இருந்த இருக்கைகள் மீது பல பயணிகள் மோதினர். சிலர் இருக்கையில் இருந்த கீழே விழுந்தனர்.

இதனால் 80 பயணிகள் காயம் அடைந்தனர். இதில் 13 பேர் மிகவும் கவலைக்கிடமாக உள்ளனர்.

அந்தப் படகு பெரிய திமிங்கலத்துடன் மோதியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# சமூக ஊடகத்தில் நபி மீது அவதூறு மலேசியருக்கு பத்தாண்டுகள் சிறை

சமூக ஊடகத்தில் நபிகளைப் பற்றி அவதூறாகப் பதிவிட்ட மலேசியருக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து மலேசியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் மலேசியாவில் இதுபோன்ற தண்டனை வரலாற்றிலேயே முதல் முறை என்று கூறப்படுகிறது.



இதுகுறித்து பொலிஸ் தலைமை அதிகாரி மொகமது ஃபுசி ஹருன் கூறும்போது –

"சமூக வலைதளங்களை முறைகேடாகப் பயன்படுத்திய வழக்கில், குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர் மீது 10 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நபிகளை அவமதித்த வழக்கில் மலேசியருக்கு 10 ஆண்டு சிறை தண்டனை வழங்கப்பட்ட நிலையில், மேலும் 3 பேர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றத்துக்கு ஓராண்டுச் சிறை அல்லது 50 ஆயிரம் ரிங்கிட்டுகள் (சுமார் ரூ.16 லட்சம்) அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படும். முதலாவதாகக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மற்றொரு நபருக்கு இன்று திங்கட்கிழமை விசாரணை நடத்தப்படும். மற்ற இருவர் மீதான குற்றம் இன்னும் நிரூபிக்கப்படவில்லை.

தகவல் தொடர்பு வட்டங்களைத் தவறாகக் கையாளுதல், இன ரீதியான நல்லிணக்கத்தைக் குலைத்தல், வன்முறையைத் தூண்டுதல் ஆகிய பிரிவுகளின் கீழ் நால்வர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சமூக வலைதளங்களில் மத ரீதியான பதிவுகளை இட்டோ, பகிர்ந்தோ நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" – என்று தெரிவித்தார்.

# இம்ரான் கானைப் பதவி நீக்கக் கோரும் மனு லாகூர் நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு

இஸ்லமாபாத், மார்ச்11

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானைப் பதவி நீக்கம் செய்யக்கோரும் மனுவை லாகூர் நீதிமன்றம் இன்று விசாரிக்கிறது.

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலின்போது, வேட்புமனுவில் தவறான தகவலை அளித்தமைக்காகப் பிரதமர் இம்ரான் கானைத் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று கோரும் மனுவை அந்த நாட்டு நீதிமன்றம் இன்று (மார்ச் 11) விசாரணைக்கு எடுத்துக்கொள்கிறது.

பிரிட்டனைச் சேர்ந்த அனாலூய்சா ஒயிட் என்பவரது மகள் டிரியன் ஒயிட், இம்ரான் கானுக்குப் பிறந்தவர் என்று பரவலாக நம்பப்படுகிறது. எனினும், பாகிஸ்தான் மக்களவைக்கு கடந்த ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் போட்டியிட்ட இம்ரான் கான், தனது வேட்புமனுவில் டிரியன் ஒயிட் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

இந்த நிலையில், தனக்கு பிரிட்டனில் ஒரு மகள் இருப்பதை வேட்புமனுவில் மறைத்ததன் மூலம், பிரதமர் இம்ரான்கான் அரசியல் சாசனத்தை மீறிவிட்டார் எனத் தெரிவித்து லாகூர் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. வேட்புமனுவில் உண்மையை மறைத்துள்ளதன் மூலம், நாட்டின்



பிரதமர் நேர்மையானவராக, இருக்க வேண்டும் என்ற அரசியல் சாசனத்தின் 62 மற்றும் 63 ஆவது பிரிவுகளை மீறியுள்ளமையால் அவரை தகுதி நீக்கம் செய்யவேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. அந்த மனுவை, லாகூர் நீதிமன்றம் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவிருக்கிறது.

முன்னதாக இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இதே போன்ற மனுவை, அந்த நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் தள்ளுபடி செய்தமை குறிப்பிடத்தக்கது.

## அதிகாரம் ஏதும் இல்லாத

# வடகொரிய நாட்டின் நாடாளுமன்ற தேர்தல்

துளியும் அதிகாரமற்ற தங்களது நாட்டின் நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் வடகொரிய மக்கள் வாக்களித்து வருகின்றனர். கிம் ஜாங் – உன் அந்நாட்டின் அதிபராக பதவியேற்ற பிறகு, இதுபோன்ற தேர்தல்கள் நடப்பது இது இரண்டாவது முறை.

சுப்ரீம் பீப்பிள்ஸ் அசம்ப்லி (எஸ்பிஏ) என அழைக்கப்படும் வடகொரியாவின் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பது என்பது கட்டாயமானதாகும். இதில் ஆச்சரியத்துக்குரிய விடயம் என்னவென்றால், தேர்தலில் ஒரேயொரு வேட்பாளர் மட்டுந்தான் போட்டியிடுவார், அவருக்கு வாக்களிப்பதை தவிர மக்களுக்கு வேறு வழியில்லை.

அதுமட்டுமின்றி, ஒவ்வொரு தேர்தலில் 100 சதவீதத்தை ஒட்டிய அளவிலேயே வாக்குப்பதிவு சதவீதம் இருக்கும்.

உலகின் தனிமைப்படுத்தப்பட்ட நாடுகளில் ஒன்றான வடகொரியாவை, கிம் வம்சத்தினர் பல தலைமுறைகளாக ஆட்சி செய்து வருகின்றனர்.

கிம் குடும்பத்தினருக்கும், நாட்டின் தலைவருக்கும் விசுவாசமாக மக்கள் இருக்க வேண்டும்.

### தேர்தல் எப்படி நடக்கும்?

தேர்தல் தினத்தன்று, வடகொரியாவை சேர்ந்த 17 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் கண்டிப்பாக வாக்



களிக்க வேண்டும்.

விசுவாசத்தின் குறியீடாக மக்கள் அதிகாலையிலேயே வாக்களிக்க வர வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவதால், ஒவ்வொரு தேர்தலின்போது வாக்குச் சாவடிகளில் கூட்டம் அலைமோதும் என்கிறார் தென்கொரியாவை சேர்ந்த அரசியல் ஆய்வாளரான பியோடோர்.

உங்களுக்கான முறை வரும்போது, ஒரேயொரு வேட்பாளரின் பெயர் குறிக்கப்பட்ட வாக்குச்சீட்டு கொடுக்கப்படும். அதை நீங்கள் வாங்கியவுடன், நிரப்பவேண்டியதோ, குறிக்கவேண்டியதோ ஒன்றுமில்லை; அதை நேரடியாக பொதுவெளியில் வைக்கப்பட்டிருக்கும் வாக்குச்சீட்டு பெட்டிக்குள் போடுவதுதான் ஒரே வேலை.



தனியாக வாக்களிப்பதற்கான வாக்குப்பதிவு மையமும் வடகொரியாவில் இருக்கிறது. ஆனால், அந்த வழியை தேர்ந்தெடுப்பவர்கள் மீது உடனடியாக சந்தேகம் எழும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வடகொரியாவின் சட்டப்படி, மக்கள் தங்களது தொகுதியில் நிற்கும் அந்த ஒரேயொரு வேட்பாளரின் பெயரை வாக்குச்சீட்டில் அழிப்பதற்கு உரிமையுண்டு என்றாலும், அப்படி செய்பவர்களை பைத்தியக்காரர்களாக காவல்துறையினர் அறிவிப்பர் என்று பியோடோர் கூறுகிறார்.

## ஒரேயொரு வேட்பாளரே போட்டி

உங்களது வாக்கை பதிவு செய்ததும், வாக்குச்சாவடியின் வெளியே நாட்டின் சீரிய தலைமைக்கு தாங்கள் வாக்களித்ததை எண்ணி கொண்டாடும் கூட்டத்தினருடன் நீங்களும் இணைவதற்கு எதிர்பார்க்கப்படுவீர்கள்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியில் முன்பும், மக்கள் வாக்களிப்பதை திருவிழா கொண்டாடுவது போன்று இருப்பதாக அரசு ஊடகங்கள் செய்தி வெளியிடும் என்று கூறுகிறார் வடகொரியா பற்றிய செய்தி இணையதளத்தின் ஆய்வாளரான மின்யங் லீ.

வடகொரியாவை பொறுத்தவரை தேர்தலில் வாக்களிப்பது என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால், ஒவ்வொரு தொகுதியில் பதிவாகும் வாக்குகளை கொண்டு அப்பகுதியில் இருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பு சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்படுவதோடு, சீனாவுக்கு தப்பியோடிய தேசத்துரோகிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

### நாடாளுமன்றத்தின் அதிகாரம் என்ன?

வடகொரியாவின் நாடாளுமன்றத்துக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது.

வடகொரியாவின் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளை கொண்ட ஒரே சட்டமியற்றும் அவையான இதன் தேர்தல் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும்.

சில சர்வதேச ஊடகங்கள் எஸ்.பி.ஏவுக்கு குறைந்தளவில் அதிகாரம் இருப்பதுபோல் செய்தி வெளியிடுவதுண்டு. அது முற்றிலும் தவறானது, வடகொரிய நாடாளுமன்றத்துக்கு துளிகூட அதிகாரமில்லை என்று கூறுகிறார் தென்கொரியாவைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளரான பியோடோர்.

நாட்டின் தலைவரால் வரைவு செய்யப்படும் சட்டங்களுக்கு நாடாளுமன்றம் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் வெறுமனே சட்டத்தை நிறைவேற்றிவிடும்.

வடகொரிய நாடாளுமன்றத்துக்கு சட்டப்படி இருக்கும் அதிகாரம் நடைமுறைக்கு வர முடியாத நிலையிலேயே உள்ளது. அதாவது, வடகொரியாவின் அரசமைப்பு சட்டத்திற்கு மாற்றுவதற்கு, அந்நாட்டு நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பகுதி உறுப்பினர்களின் ஆதரவு போதுமானது. மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் களிடையே பெரும்பான்மை ஆதரவு ஏற்படும்பட்சத்தில் கிம் ஜாங்-உன்னை அதிகாரத்திலிருந்து கீழிறக்க முடியும்.

வடகொரிய நாடாளுமன்றம் கூடுவதற்கென குறிப்பிட்ட காலவரையறை ஒன்றும் கிடையாது. புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபின் முதல்முறையாக நடைபெறும் கூட்டத்தின்போது, துணை குழு ஒன்று உருவாக்கப்பட்டு நாடாளுமன்றம் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்படும்.

வடகொரியாவின் அடிப்படை அமைப்பை பார்த்த பிறகு அங்கு ஒரேயொரு கட்சி மட்டுந்தான் உள்ளது என்று நீங்கள் நினைத்தாள் அது தவறு. ஆம், வடகொரிய நாடாளுமன்றத்தில் மூன்று வேறுபட்ட பிரிவுகள் உள்ளன.

கிம் ஜாங் – உன் தலைவராக இருக்கும் தொழிலாளர் கட்சியை சேர்ந்தவர்களே பெரும்பாலும் நாடாளுமன்றத்தை ஆக்கிரமித்தாலும், சமூக ஜனநாயக கட்சி மற்றும் சொண்டோயிஸ்ட் சோங்கு ஆகிய இருவேறு கட்சிகளும் அந்நாட்டில் உள்ளன.

கொரியாவின் மறு இணைப்பிற்கான ஜனநாயக முன்னணி ( Democratic Front for the Reunification of Korea) என்ற கூட்டணியின் மூலம் மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படுகின்றமையால் அவற்றிற்கிடையே எவ்வித வித்தியாசமும் இல்லை.

### தேர்தல் முடிவு எப்படி இருக்கும்?

இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகளை போன்று தேர்தல் முதல் வாக்கு எண்ணிக்கை வரை பதற்றத்துடன் எல்லாம் இருக்காது. வடகொரிய தேர்தல் களம். என்னதான் மக்கள் அனைவரும் ஒரேயொரு வேட்பாளருக்கு வாக்களித்தாலும், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு ஒரு சில நாள்கள் ஆகின்றன.

ஒவ்வொரு தேர்தல் முடிவுகளின் போதும், வெற்றி வேட்பாளர் குறித்த தரவுகள் மக்களை ஆச்சரியப்படுகிறதோ இல்லையோ, வாக்குப்பதிவு சதவீதம் வியப்பளிக்கும். கடந்த 2014ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் 99.97 சதவீத வாக்குகள் பதிவாகின.

0.03 சதவீதம் வாக்குப்பதிவு குறைந்ததற்கு வாக்காளர்களின் உடல்நிலையே காரணம் என்று அறிவிக்கப்பட்டது.

அடுத்ததாக கிம் ஜாங் – உன் தொகுதிக்கான முடிவுகள் அறிவிக்கப்படும். பொதுவாக கிம்மின் தொகுதியை பொறுத்தவரை வாக்குப்பதிவு சதவீதம், ஆதரவு ஆகிய இரண்டுமே 100 சதவீதம் இருக்கும். அதன் பிறகு, மற்ற தொகுதிகளின் முடிவுகள் அறிவிக்கப்படும். *

நன்றி பி.பி.ஸி.





உடுவில் மான்ஸ் த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினர் ந.புவன்சிறிந்தினர் (ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் வலயம் ) மங்கல விளக்கு ஏற்றுகின்றமையையும் சிறப்பு விருந்தினர் கு. சிவகுமார் (வலிகாமம்) பரிசில் வழங்குகின்றமையையும் மாணவிகளின் உடற்பயிற் சிக் கண்காட்சியையும் காணலாம். (இ)



# மூன்று ஆளுநர்கள் மாறி மாறி வந்தபோதிலும் வாள்வெட்டைக் கட்டுப்படுத்த முடியவில்லை

## செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் வேதனை

யாழ்ப்பாணம், மார்ச் 11

அறத்தை போதித்த யாழ்ப்பாண மண்ணில் இப்போது வாள்கள் பேசுகின்றன. முன்னொரு காலத்தில் நாம் சீருடையினருக்கு பயந்திருந்தோம். ஆனால் இப்போது எமது பிள்ளைகளைப் பார்த்தே பயப்படும் நிலை உருவாகியுள்ளது. இவ்வாறான அட்டூழியங்களை மூன்று ஆளுநர்கள் மாறி மாறி வந்த போதும் கட்டுப்படுத்த முடியவில்லை எனத் தெரிவித்தார் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தலைவர்செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன்.

யாழ். நீராவியடியில் உள்ள இலங்கைவேந்தன்மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைகளத்தின் ஏற்பாட்டில் நீதிநூல்தொகுப்புக்கள் அறிமுக விழா நேற்று முன் தினம் காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அறநெறிக் கற்கைகள் யாழ்ப்பாணத்தில் முன்னைய காலத்தில் சிறப்பாக இருந்தன. பின்னர் மெல்ல மெல்ல அவை அருகிச் சென்றதுடன் ஏனைய மாவட்டங்களில் அறநெறிக் கற்கைகள் இடம்பெற்று வந்தன. இந்நிலையில் இந்து கலாசார திணைக்களம், மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து மீண்டும் யாழ்ப்பாண மண்ணில் அறநெறியை விஸ்தரிக்க முயற்சி எடுத்து அதில் வெற்றி கண்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து இந்துச் சிறார்களும் அறநெறிக் கற்கையை கற்று அறத்தைப் பயின்று கொள்ள வேண்டும். அறத்தை போதித்த யாழ்ப்பாண மண்ணில் இப்போது வாள்கள் பேசுகின்றன. நாம் முன்னைய காலங்களில் சீருடையினருக்குப் பயந்து வாழ்ந்தோம். ஆனால் இப்போது எமது பிள்ளைகளுக்கு பயந்து வாழ்கின்றோம்.

வடக்குக்கு மூன்று ஆளுநர்கள் மாறி மாறி பதவிக்கு வந்தனர். ஆனாலும் அவர்களினால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அப்படியாயின் இது வேறு பிரதேசத்தவர்களினால் இடம்பெறுகின்றதா எனச் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் நாம் அறமில்லாத சமுதாயத்தை உருவாக்கிவிட்டோம். அதனை நாம் நல்வழிப்படுத்தித் தூய சமூகத்தை உருவாக்க வேண்டும்.

இந்து சமய அறத்தின் படி வாழ்கின்றவர்களினால் இவ்வாறான இழிவான செயல்களைச் செய்ய முடியாது. அறத்தை பயிலாமையினாலேயே இவர்கள் மனித நேயம் அற்று இப்படி செய்கின்றனர். அண்மையில் இந்துக்களின் பிரசித்தி பெற்ற தலமான திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் சிவராத்திரி தினத்துக்கண வளைவு மாற்று மதத்தினரினால் உடைக்கப்பட்டது.

அந்தச் சம்பவம் இந்துக்கள் மத்தியில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நாம் அதிலிருந்தும் மீளவில்லை.



பிரித்தானிய அரசில் அமைச்சராக இருந்த சேர் கந்தையா என்பவர் கேதீச்சரத்தைப் பாதுகாக்க கொட்டில் அமைத்துதங்கியகாலையில்தான் இப்போது பௌத்த விகாரை அமைத்துள்ளனர். இப்படியாக திருக்கேதீச்சரத்தின் வளங்கள் சூறையாடப்படுகின்றன.

இந்நிலையிலும் தற்போதைய இந்து கலாசார அமைச்சர் சிவராத்திரிக்கு முதல்நாள் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் உடனடியாகத் தலையிட்டு நீதியை நிலைநாட்ட உதவி புரிந்தார். அதனை நாம் பாராட்டுகின்றோம் – என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நீதிநூல்களின் தொகுப்புகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நல்லை ஆதின குருமுதல்வர், இந்து கலாசாரத் திணைக்கள பணிப்பாளர் உமா மகேஸ்வரன், யாழ். மாவட்ட செயலர் நா. வேதநாயகன், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் இ.த. ஜெயசீலன், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ–07)

# சர்வதேச நிறுவனங்களை திருப்திப்படுத்தும் பட்ஜெட்

## அத்துரலிய ரத்ன தேரர் சாடல்

கொழும்பு, மார்ச் 11

சர்வதேச நிறுவனங்களைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே 2019ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எமது நாட்டை நாமே உருவாக்கிக் கொள்ள வாய்ப்புகள் இருந்தும் அதனைக் கருத்தில் கொள்ளாது வெளிநாட்டு நலன்சார் வரவு–செலவுத் திட்டத்தையே ஐக்கிய தேசிய கட்சி முன் வைத்துள்ளது.

இத்தனை காலமாக மஹிந்த ஆட்சியைநாம் விமர்சித்தோம். ஆனால் இந்த அரசும் அதே பாதையில் தான் பயணித்து நாட்டை நாசமாக்கிவிட்டது. எம்மால் மீளச் செலுத்த முடியாத அளவுக்கு கடன் பெறப்பட்டு விட்டது. கடன்சுமை 84 வீதமாக அதிகரித்துள்ளது.

தோட்டத்தொழிலாளர் பிரச்சினையை எடுத்துப்பார்த்தால் அவர்களின் வாழ்க்கை மிகவும் மோசமானதாக அமைந்துள்ளது. அவர்களின் லயன் வீடுகளை நீக்கிவிட்டுப் பாதுகாப்பான வீடுகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

150 ஆண்டுகளுக்கு முன்னர் நடப்பட்ட தேயிலைச் செடிகள் தான் இன்றும் உள்ளன. அதனைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை. இந்த அரசு மிகவும் மோசமானது.

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே ஐக்கிய தேசியக் கட்சி வரவு – செலவுத் திட்டத்தை இப்பொழுது முன் வைத்துள்ளது.



இந்த ஆட்சியில் அனைத்துமே தனியார் மயப்படுத்தப்பட்டுவிட்டது. இந்த ஆட்சிக்கு எதிராக மக்கள் ஒன்றிணைந்து விட்டனர். தனியார் மயப்படுத்தல் என்பது ஐக்கிய தேசியக் கட்சி மட்டும் அல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காலத்திலும் இடம்பெற்றது.

சிங்கப்பூர், தாய்லாந்து உடன்படிக்கை மூலமாக நாட்டை விற்றுவிட்டனர். ஆகவே இந்த ஆட்சியையும் நிராகரித்து மாற்றி பயணம் ஒன்றினை நாம் உருவாக்க வேண்டியுள்ளது –என்றார்.

# ஜனாதிபதியுடன் இணைந்து இராணுவம் செயற்படுகிறது

## கூறுகிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, மார்ச் 11

போதைப்பொருளை ஒழிப்பதற்காக ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பாக இராணுவம் செயற்படுவதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க கூறியுள்ளார்.

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இராணுவமானது பலவாறான முறைகளில் பொலிஸ் விசேட படையணி, மதுஒழிப்பு தேசிய சங்கம் போன்றவற்றுடன் இணைந்து இவ்வாறான மது ஒழிப்பிற்கான செயற்திட்டங்களை மேற்கொள்கின்றது.

அந்த வகையில் தேசத்தின் பாதுகாவலர்கள் ஆகிய நாம் அனைத்து சங்கத்தினருடனும் இணைந்து இவ்வாறான செயற்திட்டத்திற்கான ஒத்துழைப்பை வழங்கவுள்ளோம்.

அத்துடன் போதைப்பொருளை ஒழிப்பதையே நாம் நோக்காகக் கொண்டுள்ளோம் – என்றார். (ஐ)

## தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஜனாதிபதி வசமானது!

கொழும்பு, மார்ச் 11

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவை, தன் வசமுள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழும், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தை நிதியமைச்சின் கீழும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொண்டு வந்துள்ளார்.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார். (ஐ)

# கொள்ளைக் குற்றச்சாட்டில் ஒருவர் அரியாலையில் கைது

யாழ்ப்பாணம் புங்கன்குளப் பகுதியில் நகை திருட்டு மற்றும் கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பூம்புகாரைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரால் விற்கப்பட்ட நகைகளில் சுமார் 7 தங்கப் பவுண் உருக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைத் தொழிலகம் ஒன்றில் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் சிறப்புப் பொலிஸ் பிரிவினரால் சந்தேக நபர் பூம்புகாரிலுள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று முன் தினம் சனிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த டிசெம்பர் மாதம் அரியாலை புங்கன்குளப் பகுதியில் உள்ள வீடொன்றின் புகைக்கூடு வழியாக உள்நுழைந்த திருடன், வீட்டிலிருந்த 5 பவுண் நகையினை திருடிக் கொண்டு அயலில் உள்ள வீடொன்றில் மதில் பாய்ந்து தப்பித்துள்ளார்.

அயல் வீட்டில் பெண்ணொருவரைக் கண்ட சந்தேகநபர் அந்தப் பெண் அணிந்திருந்த ஒரு பவுண் தங்க சங்கிலியையும் அபகரித்துத் தப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான சிறப்புப் பொலிஸ் பிரிவு நடத்திய விசாரணையில் சந்தேகநபர் இனங்காணப்பட்டார்.

இதன்படி நேற்று அதிகாலை பூம்புகார் பகுதிக்குச் சென்ற சிறப்பு பொலிஸ் குழு அவரைக் கைது செய்துள்ளது.

விசாரணையின் பின்னர் அவரைச் சான்றுப்பொருளுடன் நீதிவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)


## உல்லாசப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 11

இலங்கைக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை பெப்ரவரி மாதத்தில் ஏழு சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இரண்டு இலட்சத்து 52 ஆயிரத்து 33 உல்லாசப் பிரயாணிகள் பெப்ரவரியில் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தியாவில் இருந்தே அதிகளவான உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளனர். ஐக்கிய இராச்சியம், சீனா ஆகிய நாடுகளிலிருந்து அதற்கு அடுத்த படியாக அதிகளவான உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளனர். (ஐ)



# இந்திய அணியை கதிகலங்க வைத்தது எப்படி?

இந்திய அணிக்கெதிரான மூன்றாவது ஒருநாள் துடுப்பாட்டத்தில் சிறப்பாக விளையாடியதே அணியின் வெற்றிக்கு முக்கிய காரணம் என்று ஆஸ்திரேலியா அணியின் தலைவர் பின்ச் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா அணிக்கெதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் கோஹ்லி சிறப்பாக விளையாடியும் மற்ற வீரர்கள் சொதப்பியதால், தவான், ராயுடு, டோனி போன்ற வீரர்கள் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக தவானை எல்லாம் ஏன் அணியில் வைத்திருக்கிறீர்கள் என்ற கேள்வி கூட பத்திரிகையாளர் சந்திப்பில் கேட்க்கப்பட்டுள்ளது.

இதனால் இந்திய அணி நான்கு மற்றும் ஐந்தாவது ஒருநாள் போட்டியில் நிச்சயமாக ஒருவித மாற்றத்துடனே களமிறங்கும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் இப்படி இந்த ஒரே தொடர் மூலம் இந்திய அணியை கதிகலங்க வைத்த ஆஸ்திரேலியா அணியின் தலைவர் ஆரோன் பின்ச் மூன்றாவது போட்டி வெற்றி குறித்து கூறுகையில்,

எங்கள் வீரர்கள் மிக சிறப்பாக விளையாடினர். துடுப்பாட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டதன் மூலமே எங்களால் 300 ஓட்டங்களுக்கு மேல் எடுக்க முடிந்தது.

பேட்டிங்கில் மட்டுமல்ல பந்துவீச்சிலும் நாங்கள் சிறப்பாகவே செயல்பட்டதாக உணர்கிறேன். மேக்ஸ்வெல், உஸ்மான் கவாஜா ஆகியோர் மிகச்சிறப்பாக விளையாடினர் என்று கூறியுள்ளார்.

# ராணுவத் தொப்பி அணிந்து விளையாடிய இந்திய அணி மீது நடவடிக்கை வேண்டும்



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் இராணுவத் தொப்பி அணிந்து விளையாடிய இந்திய அணி வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சர் மெஹ்மூத் குரேஷி ஐ.சி.சி.யிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்தியா– ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி ராஞ்சியில் வெள்ளியன்று நடைபெற்றது.

இப்போட்டியில் உயிரிழந்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் இராணுவத் தொப்பியுடன் களமிறங்க இந்திய அணி முடிவு செய்தது. இதன்படி வீரர்கள் இராணுவத் தொப்பியுடன் விளையாடினர்.

இந்நிலையில், இராணுவத் தொப்பி அணிந்து இந்திய வீரர்கள் விளையாடியதற்கு பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களைச் சந்தித்த குரேஷி கூறுகையில், இந்திய அணி தன்னுடைய சொந்தத் தொப்பிக்குப் பதிலாக இராணுவத் தொப்பியை அணிந்து விளையாடியதை உலகமே பார்த்தது.

எனவே ஐ.சி.சி. தானாக முன்வந்து இந்திய அணி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கோஹ்லி வேதனை



ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான மூன்றாவது போட்டியில் இந்திய அணியின் தோல்விக்கு முதல் பாதியில் சொதப்பியது தான் என்று அணியின் தலைவர் கோஹ்லி கூறியுள்ளார்.

இந்தியா–ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையேயான மூன்றாவது ஒருநாள் போட்டி வெள்ளிக்கிழமை ராஞ்சியில் நடைபெற்றது.

இதில் முதலில் ஆடிய ஆஸ்திரேலியா அணி 313 ஓட்டங்கள் குவித்தது. அதன் பின் ஆடிய இந்திய அனி வெற்றியின் அருகில் 48.2 ஓவரில் 281 ஓட்டங்கள் எடுத்து ஆல் அவுட்டாகியது.

இந்நிலையில் இப்போட்டியின் தோல்வி குறித்து கோஹ்லி கூறுகையில், முதல் இன்னிங்ஸின் முதல் பாதியில் சொதப்பிய நாங்கள் கடைசி கட்டத்தில் சிறப்பாக விளையாடியது மகிழ்ச்சியாக இருந்தது.

ஆஸ்திரேலியா அணியும் மிக அற்புதமாக விளையாடியது. ஆஸ்திரேலியா அணி எப்படியும் 350+ ஓட்டங்களை எங்களுக்கு இலக்காக நிர்ணயிக்கும் என்று தான் நினைத்தோம்.

ஆனால் அதற்கு முன்னதாக ஆஸ்திரேலிய அணியை கட்டுப்படுத்தியது மகிழ்ச்சி தான். ஆஸ்திரேலியா துடுப்பாட்டத்தில் மட்டுமல்லாமல் பந்துவீச்சிலும் சிறப்பாக செயல்பட்டதே அன்றைய போட்டியில் அவர்களின் வெற்றிக்கான காரணம்.

இந்த வெற்றிக்கு அவர்கள் நிச்சயம் தகுதியானவர்கள். இந்த தொடர் முடிவடைய இன்னும் இரண்டு போட்டிகள் உள்ளன, நாங்கள் நிச்சயம் முழு பலத்துடன் தோல்வியில் இருந்து மீண்டு வருவோம் என்று கூறியுள்ளார்.

# புஜாராவின் ஊதியம்; வெடித்தது சர்ச்சை!



டெஸ்ட் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் புஜாராவை ஏ+ ஒப்பந்தத்தில் சேர்க்காததால் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்திய கிரிக்கெட் வாரியம் ஆண்டுதோறும் இந்திய அணி வீரர்களுக்காக ஏ+, ஏ, பி மற்றும் சி ஆகிய பிரிவுகளில் ஊதிய ஒப்பந்தத்தை வெளியிடும். அதன்படி, இந்த ஆண்டுக்கான ஊதிய ஒப்பந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுளது பல்வேறு தரப்பில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது தற்போது வெளியிடப்பட்டுள்ள ஊதிய ஒப்பந்தப் பட்டியலில் ரூ.7 கோடி ஊதியம் வழங்கும் ஏ+ பிரிவில் விராட் கோஹ்லி, ரோஹித் ஷர்மா, பும்ரா ஆகிய 3 பேர் மட்டுமே இடம்பெற்றுள்ளனர்.

ஆனால், சமீபத்தில் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் 3 சதங்களுடன் 521 ஓட்டங்கள் குவித்த புஜாரா, கிரிக்கெட் வாரிய ஊதிய ஒப்பந்தத்தில் ஏ+ பிரிவில் இடம்பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் ஏ பிரிவில் (ரூ.5 கோடி) தான் இடம்பெற்றுள்ளார்.

இது பல தரப்பினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து கிரிக்கெட் வாரிய முன்னாள் செயலாளர் நிரஞ்சன் ா கூறுகையில்,

'புஜாராவுக்கு ரூ.7 கோடி சம்பளம் கிடைக்கும் ஏ+ ஒப்பந்தம் வழங்கப்படாதது வேதனை தருகிறது. டெஸ்ட் போட்டிகளுக்கு முக்கியத்துவம் தராத வகையில் கிரிக்கெட் வாரியத்தின் நிர்வாக குழு செயல்பாடு உள்ளது' என அதிருப்தி தெரிவித்துள்ளார்.

எனினும் இதுதொடர்பாக கிரிக்கெட் வாரிய வட்டாரத்தில் கூறுகையில், 'டெஸ்ட், ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டிகளில் முதல் 10 இடங்களில் இடம் பெற்றவர்களுக்கு மட்டுமே ஏ+ ஒப்பந்தம் போடப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விவாதம் தேவையற்றது. ஏற்கனவே அணி நிர்வாகத்துடன் விவாதிக்கப்பட்டுள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தி வரும் புஜாராவுக்கு ஏ+ பிரிவு கொடுக்காதது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)



# கோஹ்லியை வேடிக்கையாக புகழ்ந்தார் கெவீன் பீற்றர்சன்!

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லியை, இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான கெவீன் பீற்றர்சன், வேடிக்கையாகப் புகழ்ந்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணி அதன் சொந்த மண்ணில், தற்போது ஆஸ்ரேலியா அணியுடன் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் மூன்று போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், இறுதியாக நடைபெற்ற இரண்டு போட்டிகளில் அடுத்தடுத்து விராட் கோஹ்லி, இரண்டு சதங்களை அடித்தார்.

இதனால் அவருக்கு இன்னாள் மற்றும் முன்னாள் வீரர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், கெவீன் பீற்றர்சனும் தன்பங்குக்கு விராட் கோஹ்லிக்கு டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

நீங்கள் எங்களை கேலி செய்கிறீர்களா கோஹ்லி? நாங்கள் எல்லாம் சாதாரணமாக விளையாடுகிறோம் என்று. அதாவது நாங்கள் எல்லாம் ஏதோ பரவாயில்லாமல் துடுப்பெடுத்தாடுகின்றோம். எங்களிடம் திறமையில்லை அதை தானே சொல்ல வருகிறீர்கள் என்று வேடிக்கையாக கோஹ்லியை புகழ்ந்துள்ளார்.

விராட் கோஹ்லி ஒட்டுமொத்தமாக ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில், 41 சதங்களை அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜெனீவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனீவா விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏடுத்த நிலைப்பாட்டுக்கு மாறாக – அதன் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியவற்றுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். , தமிழ் மக்கள் கூட்டணி ஆகியனவே கூட்டாக இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன.

இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கக்கூடாது என்ற கோரிக்கை உட்பட மூன்று கோரிக்கைகள் அடங்கிய அந்தக் கடிதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் ஏற்கனவே கையெழுத்திட்டுள்ளனர்.

புளொட் தலைவர் த. சித்தார்த்தன் அந்தக் கடிதத்தில் இன்று கையெழுத்திடுவார் எனத் தெரிய வருகின்றது.

ஜெனீவாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள இந்தக் கடிதத்தில்,

இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படக்கூடாது, இலங்கை விவகாரத்தை ஐ.நா. பொதுச் சபைக்குக் கொண்டு செல்வதன் ஊடாக இலங்கையைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் அல்லது ஐ.நா. நியமிக்கும் விசேட நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும், இலங்கை விடயத்தைக் கையாள்வதற்கு தனி அறிக்கையாளர் ஒருவரை ஐ.நா. நியமிக்கவேண்டும் ஆகிய மூன்று கோரிக்கைகளே உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜெனீவா விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவுக்கு மாறாக 5 தமிழ்க் கட்சிகள் இணைந்து கூட்டாக இந்தக் கடிதத்தை அனுப்பி வைக்கவுள்ளன. இதில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியவையும் உள்ளடங்கியிருக்கின்றமை கூட்டமைப்புக்குள் சிக்கலை உருவாக்கியிருக்கிறது. (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவற்றை ஏற்படுத்தவுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று ஆரம்பமான சிறிகொத்த – கிராமத்திற்கு என்ற வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி ஆகியன இணைந்து தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பு என்ற புதிய கட்சியை உருவாக்கியுள்ளோம்.

இந்தக் கூட்டமைப்பின் ஊடாக, சுதந்திரம், பொருளாதார வளர்ச்சி, நல்லிணக்கம், சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை என்பன பாதுகாக்கப்படும் – என்றார். (ஐ)

## சவேந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்த இராணுவம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள இலங்கை தொடர்பான அறிக்கையில், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டமைக்கு கடுமையான கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக விசாரணைகளை நடத்த இராணுவம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க,

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக இராணுவம் உள்ளக விசாரணைகளை நடத்தாது. அதற்குப் பதிலாக, ராணுவம் மீது எதற்காக போர்க்குற்றச்சாட்டு கள் சுமத்தப்படுகின்றன என்ற காரணத்தைக் கண்டறிவதற்காக உண்மை கண்டறியும் ஆய்வு ஒன்று நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## சூட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூநகரி இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் மாலை காட்டுக்குச் சென்ற போது அங்கே பொருத்தி வைக்கப்பட்டிருந்த கட்டுத் துவக்கில் சிக்கியுள்ளார்.

இதன் காரணமாக இராணுவச் சிப்பாயின் ஒரு காலில் குண்டு துளைத்துள்ளது. படுகாயமடைந்த இராணுவச் சிப்பாய் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளனர். (ஐ)

## போர்க்குற்ற விவகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாராக இல்லை. ஏற்கனவே இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் ஆயுள் நிறைவடைகின்றன. அவை தொடர்பில் இனிப் பேசிப் பயன் இல்லை.

– இப்படி இறுமாப்புடன் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஐ.நா. தீர்மானம் தொடர்பில் வெளிநாட்டு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதில் வழங்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.நா. தீர்மானத்தை வைத்துக்கொண்டு இராணுவத்தைத் தண்டிக்க ஒருபோதும் இடமளியேன். எமது இராணுவத்தினரிடம் எவரும் நெருங்க முடியாது. அவர்களைத் தொடவே முடியாது.

இனிமேல் ஐ.நா. தீர்மானம் மற்றும் போர்க்குற்ற விவகாரம் தொடர்பில் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ எவரும் என்னுடன் பேச அனுமதி வழங்காமல் இருக்க உத்தேசித்துள்ளேன்.

இந்தவிவகாரத்தை அப்படியே மூடிவைத்து விட வேண்டும். நாட்டை நல்லிணக்கப் பாதையில் கொண்டுசெல்ல அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

மூவின மக்களும் இந்த நாட்டில் நிம்மதிப் பெருமூச்சுடன் வாழும் நிலைமையை ஏற்படுத்த நான் அயராது பாடுகின்றேன். ஆனால், இலங்கையிலுள்ள சில துரோகிகள் எமது நாட்டை சர்வதேச சமூகத்திடம் காட்டிக் கொடுக்கின்றனர். இவர்களுக்கு நாட்டு மக்களே தக்க பாடம் புகட்டுவார்கள்.

உள்நாட்டு அபிவிருத்திகளில் கவனம் செலுத்தாத சில விமிகள் சர்வதேச சக்திகளிடம் அடிபணிகின்றார்கள். காலம் இவர்களுக்குப் பதிலைச் சொல்லும் – என்றார். (ஐ)

## பொது வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன ஆகிய கட்சிகள் இணைந்து பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்காவிட்டால் இரு தரப்புக்குமே வெற்றி பெற முடியாது – என்றார்.

பொதுவேட்பாளர் தெரிவு தொடர்பாக மஹிந்த அணிக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

எனினும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தலைமையில் கோட்டாபய ராஜபக்ஷ களமிறக்கப்படவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்காரணமாக இரு தரப்புக்கும் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை காரணமாக கண்டியில் இடம்பெற்ற மஹிந்த அணியின் கூட்டத்தில் பங்கேற்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடை விதித்திருந்தார்.

இந்நிலையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ஐ)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான காபன் பரிசோதனை அறிக்கை வெளியாகியுள்ளது. அதில் அந்த புதைகுழி கி.பி.1400 – கி.பி.1650 வருட காலத்திற்குரியது எனக் கூறப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மன்னார் மனிதப் புதைகுழி அரைநூற்றாண்டுக்கு உட்பட்டதே. இதுதொடர்பான உண்மைகளைக் கண்டறிவதற்குச் சர்வதேச மனித உரிமைகள் ஆணையம் பரிந்துரைக்கும் தடவியல் மருத்து-வர்களை கொண்டு வெளிப்படையான ஆய்வின் மூலமே உண்மைகளை வெளிக் கொண்டுவர முடியும்.

மனித எச்சங்கள் மண்ணின் தரம் தட்பவெட்ப சூழ்நிலைக்கு ஏற்ப அது பாதுகாக்கப்படும் காலம் வேறுபாடும். நான் நேரில் பார்த்த தடவியல் மருத்துவர் என்ற ரீதியில் என்னால் அந்த ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலஅளவிற்கு உட்பட்டதல்ல. அது அரைநூற்றாண்டுக்கு உட்பட்டவை என கூறமுடியும்.

இலங்கையில் இந்த ஆய்வை மேற்கொள்ளும் அளவுக்கு அனுபவமுள்ள தடவியல் ஆய்வாளர்கள் இல்லை என்பது என் கருத்து. இவர்கள் உபயோகிக்கின்ற டேட்டிங் முறை தவிர்த்து மனித எலும்புக் கூட்டில் உள்ள பல்லை வைத்து சரியான பிறந்த நாளையே கண்டுபிடிக்க முடியும்.

சர்வதேச மனித உரிமை ஆணையகம் பரிந்துரைக்கும் தடவியல் மருத்துவர்களை கொண்டு வெளிப்படையான ஆய்வின் மூலமே உண்மையை வெளிக்கொண்டுவர முடியும் என அவர் கூறியுள்ளார். (ஐ)

## பட்ஜெட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் வைத்து கோரிக்கை விடுத்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது கூட்டமைப்பைத் தந்திரமாக ஏமாற்றி வருகிறார் என்றும் அவர் சாடினார்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு புதிய சட்ட வரைவை தற்போதைய அரசு உருவாக்கி உள்ளது. அனால் முன்னர் இருந்த சட்டத்திலும் பார்க்கக் கடுமையான விடயங்கள் புதிய வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. உதாரணமாக போராட்டங்களையோ அல்லது பேரணிகளையோ நாம் நடத்தினால் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க முடியும். இதனால் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன.

இந்தச் சட்ட மூலத்தின் ஊடாகப் பொலிஸார்தான் நபர் ஒருவரை கைது செய்யவேண்டும் என்றில்லை. பாதுகாப்புத் தரப்பில் உள்ள யாராவது ஒருவர் கைது செய்யமுடியும். அத்துடன் கைது செய்யும் நபரை 14 நாட்களுக்குள் நீதிமன்றில் முற்படுத்தவேண்டிய தேவை இல்லை. ஒரு வருடத்துக்கு தடுத்து வைத்து விசாரணை செய்யும் அதிகாரங்களும் உள்ளன.

அதுமட்டுமன்றி இந்தச் சட்டத்தின் ஊடாகப் பெண்ணொருவரை கைது செய்யவேண்டுமானால் பெண் உத்தியோகத்தர் தான் தேவை என்றில்லை. யாரும் கைது செய்யலாம் என்ற ஏற்பாடே உள்ளது. இந்த புதிய வரைவில் மனித உரிமைக்குப் பாதகமான பல விடயங்கள் உள்ளதை உலக நாடுகளும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலும் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளன. எனினும் இதனை அரசு கண்டுகொள்வதாக இல்லை.

தற்போதைய சூழ்நிலையில் இந்த சட்ட வரைவை நிறைவேற்ற அரசுக்குப் பெரும்பான்மை இல்லை. நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கினாலேயே இதனை நிறைவேற்ற முடியும். எனவே இவ்வாறான காட்டு மிராண்டித்தமான சட்ட வரைவுக்கு ஆதரவை வழங்காது எமது கட்சியுடன் இணைந்து இதனை எதிர்க்கவேண்டும்.

அத்துடன் வரவு – செலவுத் திட்டம் வெறும் ஆசை வார்த்தைகளை பிரயோகித்து மக்களை ஏமாற்றும் திட்டமாகவே உள்ளது. வடக்கு – கிழக்கில் நிலையான அபிவிருத்தித் திட்டங்கள் எவையும் பெயர் குறிப்பிடப்பட்டுக் கூறப்படவில்லை. எனவே வடக்கு – கிழக்கு மக்களுக்குப் பிரயோசனம் அற்ற வரவு – செலவுத் திட்டத்தையும் எம்முடன் இணைந்து கூட்டமைப்பு எதிர்க்க வேண்டும்.

நாட்டின் பிரதமர் ரணில் விக்ரமசிங்க புதிய அரசமைப்பு என்ற விடயத்தைக் கையில் வைத்துக் கொண்டு கூட்டமைப்பினரை தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றார். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பல முக்கியமான விடயங்களைக் கூறுகிறார். அனால் அதனை ரணில் மிகவும் தந்திரமாக ஏமாற்றி வருகின்றார்.

எனவே வடக்கு – கிழக்கு மக்களுடன் நாமும் புதிய பயணத்தில் பயணிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்முடன் கை கோர்க்க முன்வரவேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன் – என்றார். (ஐ-07)

## மொட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான பொதுச் சின்னம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## சப்ரகமுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சப்ரகமுவ மாகாணத்திலிருந்து நிலத்திற்கு அடியில் குழாயைப் பதித்து, நீரைக் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்குப் பலர் எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## போர்க்குற்ற விசாரணையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் இலங்கை மீது தொடர்ச்சியான கவனத்தைச் செலுத்தவேண்டும் என்பதில் நாங்கள் கவனமாக இருக்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் பரிந்துரைக்கப்பட்ட சிலவற்றை தற்போதைய அரசு செய்திருந்தாலும் பல விடயங்கள் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீலங்கை விடயத்தில் சர்வதேசத்தின் மேற்பார்வை அதிகமாக இருக்கவேண்டும் என்பதில் நாங்கள் கவனமாக இருக்கின்றோம்.

இந்த விடயத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்வதில் சீனாவின் செயற்பாடு பல தடைகளை ஏற்படுத்துகின்றது. மஹிந்தவின் ஆதரவு நிலைப்பாட்டை சீனா கொண்டிருப்பதன் காரணமாக ஐ.நா.வின் பல தீர்மானங்களுக்கு ஆதரவு வழங்கவில்லை.

சீனா போன்ற நாடுகள் பாதுகாப்புச் சபையில் இருக்கும் போது இலங்கை தொடர்பில் தீர்மானங்களைக் கொண்டு வருவது எந்தளவு சாதக நிலை"யிருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும் – என்றார். (ஐ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்கள் அவரது காரை பின்தொடர்ந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீனுக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை. எனினும் அவர் பயணம் செய்த கார் சேதமடைந்துள்ளது.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்குவருகைதந்தகல்முனை பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் அண்மைக்காலமாக சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்ட நிலையில் தற்போது அந்தக் கட்சியில் இளைஞர்களை இணைக்கும் முக்கிய வேலைத் திட்டத்தில் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் அம்பாறை மாவட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# மன்னார் புதைகுழி விடயத்தில் உண்மையை அறியவேண்டும்!

## அருட்தந்தை சக்திவேல் வலியுறுத்தல்

மன்னார், மார்ச் 11

மன்னார் மனிதப் புதைகுழி மாதிரிகள் தொடர்பாக அமெரிக்காவிலிருந்து கிடைத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிக்கும், நாட்டில் யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதிக்கும். தொடர்பில்லை எனக்கூறி நழுவிவிட முடியாது. அவ்வாறெனின் காணாமற்போனோருக்கு உண்மையிலேயே என்ன நேர்ந்தது என்பதை அரசு வெளிப்படுத்தவேண்டும் என அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்–

மன்னார் மனிதப்புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள காபன் பரிசோதனை அறிக்கை குறித்து சந்தேகங்கள் இருக்குமாயின், அதனை மீண்டும் வேறொரு ஆய்வு நிறுவனத்திடம் கையளித்து மீளவும் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு மீண்டும் அனுப்பப்படும் நிறுவனத்தின் முடிவு அறிக்கையில் எவ்வளவு தூரம் உண்மைத்தன்மை காணப்படும் என்பதில் சந்தேகங்கள் உள்ளன.

அமெரிக்காவிலிருந்து கிடைக்கப்பெற்ற மன்னார் மனிதப் புதைகுழி மாதிரிகள் தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்கும், நாட்டில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதிக்கும் தொடர்பில்லை எனக்கூறி நழுவிவிட முடியாது. அவ்வாறெனின் காணாமற்போனோருக்கு உண்மையிலேயே என்ன நேர்ந்தது என்பதை அரசு வெளிப்படுத்தவேண்டும். அவ்வாறு செயற்படாவிடின் தமிழ் மக்களின் நம்பிக்கை முழுவதுமாக இழக்கப்படுகின்ற நிலை உருவாகும்.

அத்தோடு மன்னார் மனிதப்புதைகுழியில் புதைக்கப்பட்டிருந்த மனித உடல்கள் ஓர் ஒழுங்கின் அடிப்படையில் காணப்படவில்லை. முறையற்ற விதத்தில் ஒழுங்கீனமாகப் போடப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன. அப்படியாயின் அவை ஏதோவொரு விடயத்தை மறைக்கும் நோக்கில் புதைக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே இவ்விடயம் தொடர்பான உண்மை நிலையை அரசு கண்டறிய வேண்டும் – என்றார். (ஐ)

## மன்னார் மனிதப் புதைகுழி அறிக்கையை ஏற்கிறோம்!



### கூறுகின்றார் மனோ கணேசன்

கொழும்பு, மார்ச் 11

அமெரிக்க நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட காபன் பரிசோதனை அறிக்கைக்கு அமைய மன்னார் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் 500 வருடங்கள் பழமை வாய்ந்தவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைவாகவே நோக்கும்போது நீதிமன்றத்தின் முடிவுகளே இறுதியானவை. ஆகவே அவற்றை ஏற்றுக்கொள்வதாக அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதி வேட்பாளரை நாங்கள் தெரிவு செய்துவிட்டோம். அது யார் என உரிய நேரத்தில் அறிவிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## அட்மிரல் கரன்னகொட இன்று சி.ஐ.டியில் முன்னிலையாவார்



கொழும்பு, மார்ச் 11

பொலிஸாரின் கண்ணில் படாமல் தலைமறைவாக இருந்து வரும் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட இன்று விசாரணைக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகவுள்ளார்.

கொழும்பில் 11 இளைஞர் கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில், 14 ஆவது சந்தேக நபராகச் சேர்க்கப்பட்டுள்ள அட்மிரல் வசந்த கரன்னகொட, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்யக்கூடும் என்ற அச்சத்தில் அவரது வீடுகளில் தங்காமல் மறைந்திருக்கிறார்.

இந்தநிலையில், தம்மைக் கைது செய்வதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தடை விதிக்கக் கோரி அட்மி ரல் கரன்னகொட உயர்நீதி மன்றில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவைக் கடந்த 7ஆம் திகதி விசாரித்த உயர் நீதிமன்றம், அட்மிரல் கரன்ன கொடவைக் கைது செய்ய இடைக்காலத் தடை விதித்ததுடன், அவரை எதிர்வரும் 11ஆம் திகதி குற்றப் புலனாய் வுப் பிரிவில் முன்னிலையா கும்படியும் உத்தரவிட்டிருந் தது.

இந்த உத்தரவுக்கமைய, இன்று காலை 9 மணியள வில் குற்றப்புலனாய்வுப் பிரி வில்முன்னிலையாகும்படி அட்மிரல் கரன்ன கொட வுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இன்று காலை கோட்டை யில் உள்ள குற்றப் புல னாய்வுப் பிரிவு தலைமையகத்தில் முன்னிலையாகும் அவரிடம், குற்றச்சாட்டு பற்றிய தகவல்கள் தெரிவிக்கப் படும். அத்துடன் அவரிடம் வாக்குமூலமும் பெறப்படும். (ஐ)

## இலங்கையிலிருந்து இம்முறை ஜெனீவாவுக்குப் பெரும் படை

கொழும்பு, மார்ச் 11

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 40ஆவது கூட்டத் தொடரில் முதன் முறையாக இலங்கையிலிருந்து பெரும் அணியினர் சென்று கலந்துகொள்கின்றார்கள்.

ஜனாதிபதி தரப்பு, பிரதமர் தரப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தரப்பிலிருந்தே இந்த அணிகள் களமிறங்குகின்றன. இது தவிர, வழக்கம்போல, முன்னாள் படையதிகாரிகளைக் கொண்ட மஹிந்த சார்பு அணியும் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை விவகாரங்களை இலங்கையே கவனித்துக்கொள்ளும் என்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செய்தியுடன் அவரின் குழுவொன்று ஜெனீவா பயணிக்கின் றது.

மஹிந்த சமரசிங்க, சரத் அமுனுகம, வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் ஆகியோர் அந்தக் குழுவில் பங்கேற் கின்றனர்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பால் கடுப்பாகிய ரணில் அரசு, பதில் அறிக்கையொன்றை வெளியிட்டி ருந்தது. அதில், ஐ.நாவின் புதிய பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கவுள்ளதாக அறிவித்தது.

இந்தநிலையில், இப்போது அரச தரப்பிலும் குழுவொன்று ஜெனீவா செல்லவுள்ளது. திலக் மாரப்பன தலைமையிலான குழுவொன்றை ரணில் அரசு அனுப்புகின்றது.

ஜனாதிபதி, பிரதமர் தரப்புகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மல்லுக்கட்டப் போகின்றன.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் பெரிய பட்டாளமொன்று ஜெனீவா பயணமாகின்றது.

எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், ஈ.சரவணபவன், சி.சிறிதரன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் மற்றும் சில உள்ளூராட்சிச் சபை பிரதிநிதிகள் எனப் பெரும் அணியொன்று ஜெனிவாவுக்குச் செல்கின்றது.

எதிர்வரும் 18, 19, 20ஆம் திகதிகளிலேயே இந்தக் குழு ஜெனீவா வில் முகாமிடவுள்ளது.

இம்முறை ஜெனிவாவில் இலங்கையின் உள்நாட்டுக் குழப்பம் என்றுமில்லாத வகையில் எதிரொலிக் கவுள்ளது என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கும் முடிவை ரணில் குழுவும், கூட்டமைப்புக் குழுவும் கூட்டாக வலியுறுத்த மைத்திரி தரப்பு அதை எதிர்க்க சுவாரஸ்ய மோதல் அங்கு அரங்கேறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## தமிழ் மக்கள் கூட்டணிக்கு கிளிநொச்சியில் பணியகம்

### விக்கி நேற்றுத் திறந்து வைத்தார்







கிளிநொச்சி, மார்ச் 11

வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனின் புதிய கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி இல.258 ஆனந்தபுரம் கிழக்கில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

சிவப்பு, மஞ்சள், வெள்ளைக் கொடிகளுடன் இளைஞர்களின் மோட்டார் சைக்கிள் பவனியாக நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சிக்கு வருகை தந்த முன்னாள் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

அத்தோடு கட்சியின் கீதம் அறிமுகப்படுத்தப் பட்டு வெளியிடப்பட்டது. மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழ் மக்கள் கூட்டணியைச் சேர்ந்த க. அருந்தவபாலன், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர்களான றெஜி, ஆலாலசுந்தரம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(மேலும் செய்திகள் 03ஆம் பக்கத்தில்)